Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 87 | திங்கட்கிழமை 21 பெப்ரவரி 2022 | மாசி 09 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

# இறுதிவரை போராடியே மடிந்தவர் பிரபாகரன்

## டக்ளஸுக்கு, பொன்சேகா பதிலடி



யாழ்ப்பாணம், பெப்ரவரி 21

இறுதிப் போரில் பிரபாகரன் சரணடைய வில்லை. அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை. போர்க்களத்தில் அவர் இறுதி வரைப் போராடி உயிரிழந்தார். -இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பி னருமான சரத்பொன் சேகா தெரி வித்தார். 15

தடுப்பூசி விவகாரம்:

### புலனாய்வுத்துறை சிறப்பு விசாரணை

கொழும்பு, பெப். 21

பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதைத் தடுக்கும் வகையில் கட்டுக் கதைகளைப் பரப்பும் 8 குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ள 15

### பச்சைமிளகாய் திருடியோருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப். 21

மயிலங்காடு - புன்னாலைக்கட்டுவன் பகுதியில் தோட்டத்தில் பச்சை மிளகாய் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தர 15



"நன்றிக்கடனைத் தீர்க்கிறதென்டால் பதவியில இருக்கேக்க ஒண்டுமே செய்யாமல் இப்ப வந்து புலம்பி என்ன பலன்?"

### தென்மாகாணத்தில் மட்டுமே மின்வெட்டு

கொழும்பு, பெப். 21

தென் மாகாணத்தில் மாத்திரம் ஒன்றரை மணிநேரம் இன்று மின்வெட்டு இடம் பெறுமென்று பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். ஏனைய மாகாணங்களில் இன்று மின்வெட்டு இருக்காது எனவும், மின்வி நியோகத்துக்குத் 15

### டெங்கிலும் திரிபு!

கொழும்பு, பெப். 21

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கின்ற நிலையில் டெங்கு வைரஸில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரி வித்துள்ளது. 06

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் யாரை நினைவுகூர்ந்தீர்கள்?

விவரங்களைக் கேட்கிறது ரி.ஐ.டி.

வவுனியா, பெப். 21

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல்கைதி ஒருவரிடம் கடந்த மே 18 இல் அவருடைய வீட்டில் யாரை நினைவேந்தல் செய்தீர் 15

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான

### போராட்டம் ஆரம்பித்து 5 ஆண்டுகள் நிறைவு

கொட்டும் மழைக்குள்ளும் உறவுகளைத் தேடி கதறல்



கிளிநொச்சி, பெப். 21

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப் பட்டு வரும் சுழற்சி 15

## பேரம் பேசும் வாய்ப்பினை நழுவவிடும் தமிழ்க் கட்சிகள்

கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, பெப். 21

இந்தியாவின் பொருளாதார உதவியில்லாமல் இலங்கையால் இயங்க முடியாது என்ற சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே இந்தியா ஊடாக தமிழ் மக்களுக்கு செய்யக்கூடியவற்றைச் செய்ய முடியும். எமது 15

### மீண்டும் போராடுவோம்!

சுகாதாரத் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

கொழும்பு, பெப். 21

தமது கோரிக்கைகளுக்கு ஜனாதிபதியோ அல்லது சுகாதார அமைச்சரோ பதிலளிக்கத் தவறினால், 14 நாள்கள் தற்காலிகமாக இடை 06

### மைத்திரிபால யாழில் வழிபாடு

யாழ்ப்பாணம், பெப். 21

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்றுப் 15

## வடக்கு மக்களிடம் நன்றிக் கடன்பட்டுள்ளேன்

கரவெட்டியில் வைத்து மைத்திரிபால தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் என்னை வெல்ல வைப்பதற்கு வடக்கு மக்கள் அனைவரும் வாக்களித்தார்கள். அந்த நன்றிக் கடனுக்காகவே எனது ஆட்சிக் காலத்தில் யாழ்ப் 15

### பேராயரை அழைத்துச் செல்ல வத்திக்கானிலிருந்து பிரதிநிதி

கொழும்பு, பெப். 21

வத்திக்கானுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை அழைத்துச் செல்வதற்காக வத்திக்கானில் 06

ஆணையாளரின்

### அறிக்கை பகிரங்கமாக முன்னரே பதிலறிக்கையை வெளியிடத் திட்டம்

கொழும்பு, பெப். 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மனித உரிமை பேரவையில் வெளியாவதற்கு முன்னரே இலங்கை அதற்கான தனது பதிலை பகிரங்கப்படுத்தும் என்று தகவல்கள் 15

இலங்கை தொடர்பான

## பல்வேறு மனிதஉரிமை விடயங்களுக்கே ஆணையாளரின் அறிக்கை முக்கியத்துவம்

தமிழர் விவகாரம் பத்தோடு பதினொன்றாகியது

கொழும்பு, பெப். 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து கடும் விமர்சனம் 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

## மருத்துவர் அன்வர் ஹம்தானி தகவல்

கொழும்பு, பெப். 21

**மருத்துவமனைகளின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்குச் சேர்க்கப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைப் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது;

ஒட்சிசன் தேவைப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

அந்த எண்ணிக்கை தற்போது 12 வீதமாகக் காணப்படுகின்றது.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இவ்வாறான உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இந்த எண்ணிக்கை 17 வீதமாக அதிகரித்துள்ளது.

நாள்தோறும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழப்போரின் எண்ணிக்கை 30ஆக அதிகரித்துள்ளது. அவர்களில் 60 வீதமானோர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளத் தடுப்பூசிகளை முறையாகப் பெற்றுக்கொள்வதில் மக்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் -என்றார். (எ-இ)

## டெங்கு அதிகரிப்பால்

# சிவப்பு வலயமாக மட்டக்களப்பு

மட்டக்களப்பு, பெப். 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதன் காரணமாக குறித்த மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஜி.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் கடந்த ஆண்டு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட மாவட்டங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்பட்டது. இங்கு 2 ஆயிரத்து 800 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதோடு அதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, இந்தஆண்டின் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் 75 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைவே எமது மாவட்டம் சிவப்பு வலயமாக்கப்பட்டுள்ளது. ஆகவே டெங்கு நுளம்பை அழிக்கும் செயற்பாட்டை நகரப்பகுதிகளில் நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

இதனை மாவட்டத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதாயின் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் கிராமிய சங்கங்களின் ஒத்துழைப்பு சுகாதாரத் துறைக்கு மிகவும் அவசியமாக இருக்கின்றது -என்றார். (ம-ரி1)

# எரிபொருள் பயன்பாட்டுக்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டது

கொழும்பு, பெப். 21

அரச வாகனங்களுக்காக எரிபொருள் பயன்படுத்தப்படும்போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் அடங்கிய சுற்றறிக்கை அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அமைச்சுகளுக்கான செயலர் ஜே.ஜே.ரத்னசிறியால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக அத்தியாவசியமற்ற பயணத்தை மேற்கொள்ளும்போது, அரச வாகனங்களுக்கு எரிபொருளைப் பயன்படுத்த வேண்டாம் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கொழும்பில் நடைபெறுகின்ற மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து அரச அதிகாரிகளை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் செயலரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-ரி1)

# ஏற்றுமதிச் சந்தைமூலம் அந்நியச் செலாவணி!

## அமைச்சு திட்டம்

கொழும்பு, பெப். 21

ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக்கொண்டு இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

341 உள்ளூராட்சி அமைப்புகளுக்கு சர்வதேச சந்தைகளை அறிமுகப்படுத்துவதன்மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவோரின் பொருளாதாரத்தை உயர்த்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக்கொண்டுள்ளது.

தேவையான உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து கிராமிய உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# உபகரணப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் மின்சார சபை

## புதிய இணைப்பு வழங்குவதில் தாமதம்

கொழும்பு, பெப். 21

இலங்கை மின்சாரசபையில் நிலவும் உபகரணப் பற்றாக்குறை காரணமாக சில பிரதேசங்களுக்கு புதிய மின் இணைப்புகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கட்டணங்களைச் செலுத்தி பல மாதங்களாகியுள்ளபோதும், புதிய மின் இணைப்புக்கள் வழங்குவதை மின்சார சபை தாமதப்படுத்தியுள்ளது என்றும், மின் கட்டணத்தைச் செலுத்தத் தாமதமாகும்போது மின் இணைப்பைத் துண்டிப்பதுடன், தண்டம் விதிக்கப்படுகின்றது என்றும் பாவனையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

கொட்டாவ பிரதேசத்தில் புதிய மின் இணைப்புகளுக்கான பணம் செலுத்தி 6 மாதங்கள் கடந்துள்ளபோதும், இதுவரை மின் இணைப்புக்கள் வழங்கப்படவில்லை என்று பொதுமக்கள் கூறுகின்றனர். மின்மானி மற்றும் ஏனைய உபகரணங்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே புதிய மின் இணைப்புக்களை வழங்க முடியவில்லை என்றும், புதிய மின் இணைப்புக்களை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளது என்றும் மின்சார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டொலர் பற்றாக்குறை காரணமாகவே உபகரண இறக்குமதி தாமதமாகியுள்ளது என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# கவனக்குறைவால் நீரில் மூழ்கி இறப்போருக்கு இழப்பீடில்லை

## இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

கவனக்குறைவால் நீர் நிலைகளில் மூழ்கி ஏற்படும் உயிரிழப்புக்களை இடராகக் கருதி அவற்றுக்கு இழப்பீடு வழங்க முடியாது என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது;

அங்கீகரிக்கப்பட்ட நீராடும் இடங்களில் மட்டுமே உயிர்காப்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். நீராடுவதற்குப் பொருத்தமற்ற இடங்களில் எச்சரிக்கைப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களில் பெரும்பாலானோர் குடிபோதையாலும் அலட்சியத்தாலுமே உயிரிழக்கின்றனர். அவ்வாறான இறப்புக்களை இடரில் ஏற்பட்ட இழப்புகளாகக் கொள்ள முடியாது -என்றார். (எ-இ)

# பாசையூர் வெளிச்சவீடு செயற்பட ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணம், பாசையூர் கடல்பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அடையாள விளக்குக் கோபுரத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதாசன், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர். (ம-4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுத் திருவிழாவுக்கு பக்தரை அனுமதியுங்கள்

## ஓ.பன்னீர்ச்செல்வம் கோரிக்கை



**சென்னை, பெப். 21**

**கச்சதீவுத் திருவிழாவுக்கு தமிழக பக்தர்களை அனுமதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்ச்செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

தமிழகக் கடலோர மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு கச்ச தீவு மத ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.

பல ஆண்டுகளாக அவர்கள் அந்தோனியார் தேவாலயத் திருவிழாவில் பங்கேற்க புனித யாத்திரை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டி இந்தியா மற்றும் இலங்கைப் பக்தர்கள் இல்லாது, எதிர் வரும் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் தேவாலயத் திருவிழாவை நடத்த இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தமிழக மீனவர்களிடையே மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரத்தை இலங்கை அரசின் கவனத்துக்கு எடுத்துச்சென்று தமிழகம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த பக்தர்கள் தேவாலயத் திருவிழாவில் கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அவர் அந்தக் கடிதத்தில் கோரியுள்ளார். (எ-இ)

# தேவையற்ற தீர்மானங்களால் மக்களின் உயிருக்கே ஆபத்து

## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 21

அரசின் தேவையற்ற தீர்மானங்களால், நாளாந்தம் மக்களின் உயிரே காவு கொள்ளப்படுகின்றது. மக்களுக்கு இலவசமாக வழங்கும் பரிசாக கொரோனாத் தொற்று மாற்றமடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அரசின் இயலாமை காரணமாகவே, இன்று ஆயிரக்கணக்கான உயிர்கள் இல்லாது போயுள்ளன. நாட்டில் முதலாவது அலை ஏற்படும்போது, விமான நிலையத்தை உரிய நேரத்தில் மூடவில்லை. உரிய தடுப்பூசிகளைச் செலுத்தாது, தம்மிக்க பாணிக்கு பின்னால் அரசு சென்றது.

மினுவங்கொட பகுதியில் மற்றுமொரு கொரோனா அலை ஏற்படும்போது, கம்பஹா மாவட்டத்தை மாத்திரம் மூடாதிருந்தமையால், நாடு முழுவதும் அது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

# வாய் வார்த்தைகளால் நாட்டை ஆள முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21

மொட்டுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கியதன் ஊடாக, நாட்டுக்கு நேர்ந்த கதியை மக்கள் படிப்பினையாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

வெறும் வாய் வார்த்தைகளால் நாட்டை ஆளமுடியாது என்பதையும்புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிலியந்தலை பொகுந்தர சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்துக்கு அத்தியாவசியமான முச்சக்கர வண்டியைக் கையளிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடு பாரதூரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அழகிய வாய்வார்த்தைகளால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

ஆட்சி அதிகாரத்துக்கு வந்தபின் செய்யப்போகும் திட்டங்களை ஆட்சி அதிகாரமின்றி ஐக்கிய மக்கள் சக்தி செய்து காட்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-இ)



## வவுனியா மாவட்ட தொழில்துறை அலுவலகத்துக்கு அமைச்சர் நிமால் பயணம்!

வவுனியா, பெப். 21

வவுனியா மாவட்ட தொழில் அலுவலகத்துக்கு தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டதுடன் அலுவலக உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். இந்தக் கலந்துரையாடலில் உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் தொழில்துறை அமைச்சர் நிமால் சிறி பால டி சில்வா, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் மற்றும் அரச உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ய-110)




மூண்டு நாளைக்கு முதல் அராலியில ஒரு வயசான அம்மாவின்ர சங்கிலியை இன்னொரு பொம்பிளை அபேஸ் பண்ணிக்கொண்டு ஓடிப் போட்டா எண்டு செய்தி வாசிச்சிருப்பியள். அன்டைக்கு நடந்ததை கொஞ்சம் விளக்கமாச் சொன்னால், வேற ஆரும் அப்பிடி ஏமாறாமல் இருப்பீங்கள் எண்டு பட்சிக்கு ஒரு நினைப்பு.


அந்த அம்மாவுக்கு ஏலாதெண்டு அராலி ஆஸ்பத்திரிக்கு மருந்தெடுத்திட்டு, பஸ் ஏதும் வருகுதோ எண்டு பார்த்துக்கொண்டு மெயின் ரோட்டில நிண்டிருக்கிறா. அவான்ர கழுத்தில பெரிய தங் கச்சங்கிலி மின்னிக் கொண்டிருந்திச்சு. அப்ப ஒரு பொம்பிளை மோட்டர் சைக்கிளிலை அந்தப் பக்கம் போயிருக்கிறா. போகேக்க இந்த அம்மாவைக் கண்டிட்டு "எங்க போக நிக்கிறியள்?" எண்டு கேக்க, அவாவும் தான் போகவேண்டிய இடத்தைச் சொல்லியிருக்கிறா. உடன மோட்டர் சைக்கிளில வந்தவா "அதாலதான் நானும் போறன். பாவம் ஏன் வருத்தத்தோட நிக்கிறியள். வாங்கோ நான் கொண்டுபோய் விடுறன்" எண்டு சொல்லியிருக்கிறா.

இந்த அம்மாவும் சரியெண்டு மோட்டர் சைக்கிளில ஏறிப்போக, மற்றவா கதை குடுத்திருக்கிறா. கதையோட கதையா "அம்மா இஞ்ச ஒரே கள்ளர் பயம். நீங்கள் என்னெண்டா இந்தப் பெரிய சங்கிலியைப் போட்டுக்கொண்டு வாறீங்கள். கவனமா இருக்க வேணுமம்மா. உதைக் கழட்டி பேர்ஸுக்க வையுங்கோ" எண்டு அந்த அம்மாவுக்கு அக்கறையா அட்வைஸ் பண்ணியிருக்கிறா. அந்த அம்மாவும் அதைக் கேட்டிட்டு "ஓம் பிள்ளை நீ சொல்றதும் சரிதான்" எண்டிட்டு சங்கிலியைப் பேர்ஸுக்குள்ள வைச்சிட்டா. அப்பவும் மோட்டர்சைக்கிளில ஓடிக்கொண்டிருந்தவாக்கு திருப்தியில்லை. "எணேய், இப்பிடி கையில வைச்சிருந்தால் பறிச்சுக்கொண்டு போடுவாங்கள். நீங்கள் என்ர பைக்குள்ள வையுங்கோ, இறங்கேக்க எடுக்கலாம்" எண்டு தன்ர பைக்கின்ர சீற்றை திறந்து அதுக்குள்ள பேர்ஸை வைக்கப் பண்ணிட்டா.

அப்பிடியே கொஞ்சத்தூரம் பைக்கை ஓடிக் கொண்டு போயிட்டு, திடீரெண்டு அதை நிப்பாட்டிட்டா.

"அம்மா கொஞ்சம் கீழ இறங்குங்கோ, பைக் ஏதோ பிரச்சினை குடுக்கு. ஓடமாட்டன் எண்டுது" எண்டு இவா சொல்ல, அந்த அம்மாவும் பைக்கை விட்டு இறங்கியிருக்கா. அவ்வளவுதான். அந்த மோட்டர் பைக்கில வந்த பொம்பிளை அப்பிடியே மின்னல் வேகத்தில ஓடிப் போட்டா. இந்த அம்மா சங்கிலியையும், பேர்ஸையும் கண்ணுக்கு முன்னால பறிகுடுத்த ஏக்கத்தில அப்பிடியே திகைச்சுப் போய் நிண்டிட்டா. பிறகு தான் ஆக்களைக் கூப்பிட்டு நடந்ததைச் சொல்லி யிருக்கிறா. அந்த அம்மா சொன்ன அங்க அடையாளங்களையும், பைக் நம்பரையும் வைச்சு சங்கிலியை அபேஸ் பண்ணினவாவை பொலிஸ் பிடிச்சிருக்கு.

இப்ப இதை ஏன் இவ்வளவு விளக்கமாச் சொன்னனாங்கள் எண்டால், இப்பிடி ஆரும் உதவி செய்யிறன் எண்டு வலிய வந்தால் கொஞ்சம் அவதானமாக இருங்கோ எண்டதுக்குத்தான். உங்கட உடைமைகளை நீங்கள்தான் பாதுகாப்பா வைச்சிருக்கவேணும். தெரியாத ஆக்களின்ர வாகனங்களில இப்பிடி ஏறிப்போறதைத் தவிருங்கோ.




- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்களுக்கான உரிமைகள் ஒன்றுபட்டாலே கிட்டும்

## – க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்து



**யாழ்ப்பாணம், பெப். 21**
**பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமானால், அனைவரும் ஒன்றிணைந்து குரல் எழுப்பினாலே கிடைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஆதரவில் இடம்பெறும் 'பெண்களுக்கான பாதையை உருவாக்குதல் மற்றும் பெண் குடும்பத் தலைவர்களுக்கான மாறிச்செல்லும் வரைவிலக்கணங்களை உருவாக்குதல்' என்ற தலைப்பிலான ஆய்வு ஆவணப் பகிர்வு நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, பாதுகாப்பு, சமூகம், சுற்றாடல் எனப் பல பிரச்சினைகள் இருப்பதை நாம் இனங்காணமுடியும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வென்ன என்பதே உங்கள் அனைவரதும் கேள்வி. இதற்கு அரசின் நிலைப்பாடுகள் என்ன என்று பல கேள்விகளை அரச அலுவலர்கள் முன்வைக்கின்றனர்.

இன்னொருசாரார் வெளிநாட்டு நிதி உதவிகளுடன் 'நம் கையே நமக்குதவி' என்று தற்சார்பு நடவடிக்கைகளில் இறங்கினால்தான் விமோசனம் என்கின்றார்கள்.

எனவே ஒரே குரலுடன் அரசை அணுகவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் பாடுபடும் பல்வேறு நிறுவனங்களுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி, உங்கள் ஒற்றுமையைப் பலப்படுத்த வேண்டும். அரசியலிலும் இதைத்தான் செய்யவேண்டும். ஒற்றுமை ஏற்பட்டால் உங்கள் குரலுக்கு ஒரு மதிப்பு ஏற்படும்.

அரசின் நிலைப்பாடுகள், அரசின் ஒதுக்கீடுகள், அரசின் கொடுப்பனவுகள், அரசின் பாரபட்சம் போன்ற விடயங்களை நீங்கள் ஒற்றுமையுடன் அரசிடம் கேட்டீர்களானால், அதற்கு அவர்கள் பதில் அளிக்க வேண்டிய கடப்பாட்டில் இருப்பார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று அதிகாரத்தில் உள்ளவர்களின் சகாயத்தோடுதொடர்புவைத்திருந்தால் கூடிய நன்மை பயக்கும்.

அரசியல்வாதிகள் தாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் அரசியல் இலாபம் பெறவே பார்ப்பார்கள்.

அதைப் பொருட்படுத்தாமல் அவர்களின் ஒத்தாசையைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் காரியங்களில் கண்ணாயிருங்கள் -என்றார்.

(ம-4-இ)

## ஜூலை மாதத்துடன் தடுப்பூசி காலாவதி

கொழும்பு, பெப்.21
நாட்டிலுள்ள ஒருதொகுதி கொரோனாத் தடுப்பூசிகள் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் காலாவதியாகின்றன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

பொது இடங்களுக்குச் செல்பவர்கள், கொரோனாத் தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றிருக்கவேண்டும் என்ற நடைமுறை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியுடன் நடைமுறைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ய)

## பேக்கரியில் தீவிபத்து பணியாளருக்கு காயம்

கிளிநொச்சி, பெப். 21
பேக்கரி ஒன்றில் திடீரென தீ பரவியதால் தீக்காயங்களுக்கு உள்ளான பணியாளர் ஒருவர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த ஜெராா்ட் (வயது-65) என்பவரே தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-113)



## தமிழர் உரிமை கண்காணிப்பக இரண்டாவது அமர்வு மன்னாரில்

மன்னார், பெப். 21
தமிழர் உரிமை கண்காணிப்பகத்தின் இரண்டாவது மக்கள் அமர்வு சட்டத்தரணி ரி.வினோதன் தலைமையில் மன்னார் ஞானோதயா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல் செயற்பாடுகள், மன்னார்- பள்ளிமுனைப் பகுதியில் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள், அத்துமீறி மேற்கொள்ளப்படும் கனிய மணல் அகழ்வு, வினைத்திறனற்ற கழிவகற்றல் நடவடிக்கை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், போர்க்குற்ற உள்ளகப் பொறிமுறை விசாரணை என்பன தொடர்பாக சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. (ய-56)

## தென்மராட்சி மாணவருக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் 16-19 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட சினோபார்ம் தடுப்பூசி மருந்து இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. விடுமுறை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டு ஒரு மாதம் பூர்த்தியான மாணவர்கள் தவறாமல் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-9)

### பச்சிலைப்பள்ளியில்

## கொடுப்பனவு மறுக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள்

கிளிநொச்சி, பெப். 21
பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்களுக்கு கடந்த 3 ஆண்டுகளாக சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வுக்காக குடும்ப அட்டை இடமாற்றியதாகவும் முன்னர் தற்காலிகமாக தங்கியிருந்த பிரிவுகளில் மாதாந்தக் கொடுப்பனவு தமக்கு வழங்கப்பட்டதாகவும் கடந்த 2019ஆம் ஆண்டு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த பின்னர் தமக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் மீளக்குடியமர்ந்த காலம் தொடக்கம் சமுர்த்தி குழுவுக்குரிய கட்டணம் மாதாந்தம் செலுத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

(ம-ரி1-9)

## சிவகரனிடம் ரி.ஐ.டியினர் 5 மணிநேரம் விசாரணை

மன்னார், பெப். 21
தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரனிடம் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் சுமார் 5 மணிநேர விசாரணையை முன்னெடுத்தனர்.

கொழும்பு கிருலப்பனையிலுள்ள பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவின் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் சிவகரன் தெரிவிக்கையில்;

விசாரணையின்போது தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் கடந்த 10 ஆண்டுகளில் நடத்திய போராட்டங்கள், கூட்டங்கள் தொடர்பிலும் பல்வேறு விதமான கேள்விகள் கேட்கப்பட்டன.

அவற்றில் பல வெறும் கற்பனைக் கதையாக இருந்தன. மூன்று மாதத்துக்கு ஒரு தடவை இந்தவிதமாக விசாரணையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்களை தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்துவது கருத்துரிமையையும் செயற்பாட்டையும் கேள்விக்குட்படுத்தி, அடிப்படை வாழ்வுரிமையை வலிந்து நசுக்குவதாகவே எமக்கு புலப்படுகிறது -என்றார்.

(வ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு – கிழக்கு

# மாணவர்களினது கல்வி வளர்ச்சியில் புலம்பெயர்ந்தோர் பங்கு அளப்பரியது

சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு





**மன்னார், பெப். 21**

**வடக்கு- கிழக்கிலுள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு புலம்பெயர் தேசங்களிலுள்ள எமது உறவுகள் பெரும் பங்களிப்பைச் செய்து வருகிறார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

வன்னி மண் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், தெரிவுசெய்யப்பட்ட 38 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்வு மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்வி எமது இனத்தின் மிகப் பெரிய கொடை. எமது மாணவர்கள் அதனை திறம்படச் செய்து வருகின்றனர். பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் வடக்கு- கிழக்கில் அதிகமானவர்கள்.

கிடைக்கப்பெறுகின்ற அனுமதியை நாங்கள் தகுந்த முறையில் கொண்டுசெல்லவேண்டும். பல்கலைக்கழக அனுமதியை நாங்கள் பெற்றுக்கொள்வதோடு, எங்களுடைய பிரதேசத்துக்கு, எமது மாவட்டங்களுக்கு நாங்கள் முழுமையான கல்வியை மட்டும் கற்றால் போதாது. எம்மைச் சூழ உள்ளவர்களையும் நாங்கள் கல்வி கற்க ஊக்குவிக்க வேண்டும். அல்லது அவர்களுக்கு எங்களால் முடிந்த உதவியை பொருளாகவோ அல்லது பணமாகவோ அல்லது ஆலோசனையாகவோ கட்டாயம் நாம் செய்ய வேண்டும். புலம்பெயர் தேசங்களில் உள்ள எமது உறவுகள் இங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்து வருகிறார்கள்.

அவர்களைக் கௌரவிக்கும் முகமாகவே இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தோம் - என்றார். (ம-ரி1-56)

## ‘நீதிக்கான எங்களின் குரல்’ கலந்துரையாடல் நல்லூரில்



யாழ்ப்பாணம், பெப். 21

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், ‘நீதிக்கான எங்களின் குரல்’ எனும் தொனிப்பொருளில் அரசியல்சார் கலந்துரையாடலொன்று நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய நிகழ்த்தித்திட்ட பணிப்பாளர் இந்துமதி கரிகரதாமோதரன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.வி.விக்னேஸ்வரன், சி.சிறீதரன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், பெண்கள் தொடர்பான அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-ரி1-20)



## கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் மானிப்பாய் பிரதேசசபைக்கு பயணம்

யாழ்ப்பாணம்,பெப். 21

கொழும்பு மாநகர சபையினர் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபைக்குப் பயணம் மேற்கொண்டனர். மானிப்பாய் பிரதேச சபையால் முன்வைக்கப்பட்ட அழைப்புக்கு அமைய அவர்கள் அங்கு சென்றனர்.

கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க உள்ளிட்ட சபை உறுப்பினர்கள் அடங்கிய குழாமை, மானிப்பாய் பிரதேசசபையின் தவிசாளர் அ. ஜெபநேசன் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர். குறித்த விஜயத்தில் மானிப்பாய் பிரதேசசபையினருக்கும் கொழும்பு மாநகர சபையினருக்கும் இடையில் நட்புறவு ரீதியான கலந்துரையாடல் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. (ம-ரி1,125)



சிறுபான்மையினரின்

## சமகால அரசியல் கருத்துப் பகிர்வு!

மட்டக்களப்பு, பெப். 21

சிறுபான்மை மக்களின் அரசியல் சூழல் தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் செயலமர்வு கல்முனையில் அண்மையில் இடம்பெற்றது.

‘அகம் மனிதாபிமான வள’ நிலையத்தின் பிரதி இணைப்பாளர் ஏ.மதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்துப்பகிர்வில், பிரதான வளவாளராக அரசியல் ஆய்வாளர் ஏ.யதீந்திரா கலந்துகொண்டு கருத்துகளை வழங்கினார்.

13ஆவது திருத்தச்சட்டமும் மாகாணசபையும், இலங்கையின் சமாதான முன்னெடுப்பு, சமாதானத்துக்கான மேற்குலக நாடுகளின் தலையீடுகள், இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கருத்துகள் பகிரப்பட்டன. சமூக மட்ட அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர். (வ-இ)

## விடுதி விடுப்புப் பத்திரத்துக்காக 9 மணித்தியாலங்கள் காத்திருப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

நோயாளர் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் குணமடைந்த பெண் ஒருவர், மருத்துவமனையிடமிருந்து விடுவிப்புப் பத்திரத்தைப் பெறுவதற்காக சுமார் 9 மணித்தியாலங்களாக காத்திருந்த சம்பவம் யாழ். போதனாவில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 17ஆம் திகதி இளவாலை வடலியடைப்பு பகுதியில் விபத்துக்குள்ளான பெண், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலிருந்து, யாழ். போதனா மருத்துவமனையில் 16ஆம் இலக்க நோயாளர் விடுதியில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

நேற்று முன்தினம் அவருக்கான சிகிச்சைகள் முடிவடைந்த தால் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். அவர் விடுதியின் வெளியே உள்ள இருக்கையில் விடுவிப்புப் பத்திரத்துக்காகக் காத்திருந்தார். இதற்காக முற்பகல் 10 மணியிலிருந்து மாலை 7 மணிவரை அவர் காத்திருக்க வேண்டியிருந்தது.

இது தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி நந்தகுமாரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அன்றையதினம் நோயாளர்களின் அனுமதி அதிகரித்திருந்தமையால், கட்டில் பற்றாக்குறை காரணமாகவே குறித்த நோயாளரை விடுவிக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவரைக் காக்கவைத்தது தவறு. உடனடி நடவடிக்கையாக நோயாளர் விடுதியிலிருந்து அவர் தற்சமயம் விடுவிக்கப்பட்டுள்ளார். இனிவரும் காலங்களில் இவ்வாறாகச் செயற்படும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-4,125)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

மன்னார், பெப். 21

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டிச் சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில், இரட்டை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை திருக்கேதீஸ்வரம் இரட்டை மாட்டு வண்டித் திடலில் இடம்பெற்றது.

போட்டியானது ஏ,பி,சி,டி,ஈ ஆகிய 5 பிரிவுகளில் இடம்பெற்றதோடு மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இதன்போது வெற்றிபெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ரி1-56)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### புத்தாண்டு காலத்தில்

# உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாதாம்!

### இராஜாங்க அமைச்சர் கூறுகின்றார்

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது. நியாய விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்யக் கூடிய நிலை உருவாகும் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில், மாதமொன்றுக்கு 15 கிலோ கோதுமைமா வழங்கும் வேலைத்திட்டம் நேற்று நுவரெலியா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உலகளவில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலையில், நுகர்வுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை ஏற்கின்றோம், எமது நாட்டிலும் அரிசி, பால்மா, கோதுமைமா, சீனி, சமையல் எரிவாயு மற்றும் சிமெந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்ததுடன், விலை அதிகரிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பொருள்களுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாட்டு நிலை படிப்படியாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக சீனி, அரிசி போன்றவற்றுக்கு தட்டுப்பாடு இல்லை. அதேபோல சமையல் எரிவாயு விடயத்திலும் சில நாள்களுக்கு முன்னர் இருந்தநிலை தற்போது இல்லை.

அதேவேளை, தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் எந்தவித தட்டுப்பாடும் இன்றி அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்காக ஜனாதிபதியால் நிதி அமைச்சர் தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தமது பணியை சரிவர நிறைவேற்றும். புத்தாண்டுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருள்களை வாங்கக்கூடிய சூழல் உருவாகும் -என்றார். (எ-44)

## மாணவர்கள் கவனத்துக்கு

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில், பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸைப்பெற்று 3 மாதங்கள் கடந்தவர்கள் இன்றும் நாளையும் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இரண்டாவது டோஸை பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஒ-5)



## விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் மைதானத்துக்கு அருகாமையில் மோட்டார் சைக்கிளும் - மாட்டு வண்டியும் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளான்.

மூளாயைச் சேர்ந்த சின்னையா லோகேஸ்வரன் (வயது-32) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளான்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் நேற்று இரவு உயிரிழந்துள்ளான். (ஒ-27)

## 45 அடி குழிக்குள் விழுந்த பெண் மீட்பு

கொழும்பு, பெப். 21

சுமார் 45அடி ஆழமான குழியில் விழுந்த பெண் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலி அம்பேகம மிரிஸ்வத்த மலைப் பகுதியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. குறித்த பெண் அலறும் சத்தத்தைக்கேட்ட அந்தப் பகுதி மக்கள் பத்தேகம பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மக்களின் உதவியுடன் பெண்ணை மீட்டனர். அவர் சிகிச்சைக்காக காலி கராபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-ரி1)

## முன்பள்ளி ஆசிரியர்கள் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் தமது சம்பள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக இன்று காலை 7 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வடமாகாணத்தில் உள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் இணைந்து வடமாகாண சபையின் முன்பாக காலை 9 மணியளவில்தங்களுடையசம்பளப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக மாபெரும் போராட்டத்தை நடத்தவுள்ளனர். (ஒ-125)

### பேராயரை...

இருந்து விசேட பிரதிநிதி அருட்தந்தை நெவில் ஜோ இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான இலங்கை அரசின் விசாரணையை இனியும் நம்பமுடியாது என்று தெரிவித்து வரும் பேராயர், இது தொடர்பில் பாப்பரசருக்கு விளக்கமளிக்கவுள்ளார். அத்துடன் சர்வதேச விசாரணையைக் கோருவதற்கான ஏற்பாடுகளையும் அவர் மேற்கொள்வார் என்று தெரியவருகின்றது. (ஒ-இ)


## மரண அறிவித்தல்



திருமதி **வெற்றிவேலு தங்கரத்தினம்**

உடுவில் கற்பகப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் 6ஆம் வட்டாரம் மண்டைதீவை புகுந்த இடமாகவும் தற்போது உடுவில் கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வெற்றிவேலு தங்கரத்தினம் அவர்கள் நேற்று (20.02.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் செல்லம்மாவின் இளைய புதல்வியும், காலஞ்சென்ற காசிநாதர் வெற்றிவேலு அவர்களின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோவிலடி
உடுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்: பெறா மக்கள்
076 565 6118


### மீண்டும்...

நிறுத்தப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சுகாதார தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைய வேலைநிறுத்தப் போராட்டம் ஏழு கோரிக்கைகளை முன்வைத்து ஒன்பது நாள்களாக முன்னெடுக்கப்பட்டதாகவும், சுகாதார அமைச்சருடன் நடத்திய பேச்சுக்களின் போது நான்கு கோரிக்கைகள் தொடர்பில் இடைக்கால இணக்கப்பாடு எட்டப்பட்டதாகவும், மூன்று கோரிக்கைகளுக்கான தீர்வுகள் நிலுவையில் உள்ள நிலையில், அமைச்சரால் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமல் போனதாகவும் சுகாதார வல்லுநர்களின் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். எனவே, மூன்று கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி தலையிட்டு தீர்வுகளை வழங்குவார் என எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

### டெங்கிலும்...

தற்போது நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படும் காலத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதன்காரணமாக 24 மணித்தியாலங்களுக்கு மேல் நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் மருத்துவரின் உதவியை நாடுமாறு அறிவுறுத்தப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் மருத்துவ நிபுணர் அனோஜா வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 9 ஆயிரத்து 609 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். (அ-ஒ-இ)

### பல்வேறு...

காணப்படுவதாகவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் முன்னேற்றம் காணப்படாததமை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸாரினால் தடுத்து வைக்கப்படுபவர்கள் உயிரிழப்பதும் சட்டவிரோத படுகொலைகள் அதிகரித்துள்ளதும் குறித்தும் தெரிவித்துள்ள மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை குறித்து மேலும் தெரியவருவதாவது:-

ஆணையாளரின் 17 பக்க அறிக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசியம் குறித்து அதிகளவு வலியுறுத்தியுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு நிலைமாற்றுக்கால நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முறையான நம்பகரமான புதிய திட்டமொன்றை உருவாக்கவில்லை என மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள் குறித்த விசாரணையில் போதியளவு முன்னேற்றம் ஏற்படவில்லை எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் நிர்வாகத்தை இயக்குவதற்காக இராணுவ அதிகாரிகளை நம்பியிருப்பது குறித்தும் ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருட அறிக்கையில் இராணுவ அதிகாரிகளை சிவில் நிர்வாக பணிகளில் இணைப்பதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற வேண்டுகோள் இடம்பெற்றிருந்தது. ஆனால் கடந்த வருடம் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவமயப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்தினர் செயற்படுவதற்கான தளத்தை மேலும் அதிகரிக்கவேண்டும் எனவும் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. இன,மத பதற்றங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிநபர்களுக்கு எதிரான தடைகள் தொடர்பிலும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இராஜாங்க திணைக்களத்தின் தடைகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பக்திக்குத் தடையாகுமா பூஸ்டர்?


'பூஸ்டர் டோஸ் போட்டவர்களே சிவராத்திரி தினத்தன்று திருக்கேதீச்சரத்துக்கு அனுமதிக்கப்படுவர்' என்று மன்னார் மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார். கொரோனாப் பரவல் தீவிரம் பெற்றுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வரவேற்கப்படவேண்டிய தொன்றே. இதன் மூலம் சிவராத்திரியால் இன்னொரு கொரோனாக் கொத்தணி பரவாமல் தடுக்கலாம். ஆனால், பூஸ்டர் டோஸ் போட்டால் கொரோனாத் தொற்று ஏற்படாதா? பொது இடங்களுக்குச் செல்பவர்கள் பூஸ்டர் டோஸ் போட்டிருக்க வேண்டும் என வேறெங்காவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதா? என்ற கேள்விகளும் இதன்போது இயல்பாக எழவே செய்கின்றன.

பூஸ்டர் டோஸ் செலுத்திக்கொண்ட பின்னரும்கூட கொரோனாத் தாக்கத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்றவர்கள் இலங்கையில் இருக்கவே செய்கிறார்கள். வேண்டுமானால் கொரோனாவால் உண்டாகும் தாக்கத்தை பூஸ்டர் டோஸ் தணிக்குமே தவிர, முற்றாக கொரோனா பரவுவதில் இருந்து பூஸ்டர் டோஸால் காக்க முடியாது என்பது நிரூபணமாகியிருக்கிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் , அநுராதபுரத்தில் பொதுஜன பெரமுன தன்னுடைய பரப்புரைக் கூட்டத்தை பெருமெடுப்பில் நடத்தியிருந்தது. நாடெங்கிலும் இருந்து ஆயிரக்கணக்கானோர் இந்தப் பரப்புரைக் கூட்டத்துக்கு பஸ்களில் கொண்டு வரப்பட்டனர். ஆனால், அந்தக்கூட்டத்துக்கு வருபவர்கள்கட்டாயம்பூஸ்டர் டோஸ் ஏற்றியிருக்க வேண்டும் என சுகாதாரத்துறை கட்டுப்பாடுகள் எதுவும் விதித்திருக்கவில்லை. அதேபோல இந்தமுறை சுதந்திர தினக் கொண்டாட்டத்திலும் இப்படி பூஸ்டர் டோஸ் ஏற்றியவர்களே வரலாம் என்று கட்டுப்பாடுகள் போடப்பட்டிருக்கவில்லை. கட்சிப் பரப்புரைக் கூட்டங்களிலும், அரச விழாக்களில் கைக்கொள்ளப்படாத நடைமுறையொன்று, இந்துக்களின் விசேட தினமொன்றில் அதுவும் கோயிலொன்றில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படுவது அவசியமா? ஏற்கனவே கடந்த வருடமும் கொரோனாத் தொற்றால் திருக்கேத்தீச்சரத்தில் சிவராத்திரி நிகழ்வு சோபித்திருக்கவில்லை. வெளியூர்களில் இருந்து பக்தர்கள் கலந்து கொள்ளமுடியாமல் போனதே இதற்கு தலையாய காரணம். எனவே இம்முறையாவது திருக்கேதீச்சரத் தானை சிவராத்திரி நன்னாளில் வணங்கலாமென்ற நினைப்பில் இருந்த பல பக்தர்களுக்கு 'பூஸ்டர் டோஸ் போட்டிருந்தாலே கேதீச்சரத்துக்குள் அனுமதிக்கப்படுவர்' என்ற அறிவிப்பானது அவ்வளவு உவப்பானதாக இருக்கவில்லை.

ஏனெனில் இரண்டாவது தடுப்பூசி ஏற்றி மூன்று மாதங்களுக்குப் பின்னரே பூஸ்டர் டோஸை ஏற்றிக்கொள்ள முடியும். ஆனால், சிலர் இப்போதுதான் இரண்டாம் கட்டத்தடுப்பூசியையே பெற்றிருக்கின்றனர். எனவே பூஸ்டர் டோஸை அவர்கள் ஏற்றிக்கொள்வதென்பது சாத்தியமற்றது. அதைவிட நோய் நிலைமை, தடுப்பூசிகள் மீதான அவநம்பிக்கை, பூஸ்டர் டோஸ் ஏற்றுதல் பற்றிய சரியான தகவல்கள் சென்றடையாமை, முதுமை போன்ற பல காரணிகளால், மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டர் டோஸை ஏற்றிக்கொள்வதில் பலரும் ஆர்வம் காட்டியிருக்கவில்லை. இந்த நிலையில், பூஸ்டர் டோஸை ஏற்றியிருந்தாலே திருக்கேதீச்சரத்துக்குள் நுழையலாம் என்ற அறிவிப்பு, பூஸ்டர் டோஸை ஏற்றியிராதவர்களின் சிவராத்திரி வழிபாட்டுக்கு தடை போட்டுள்ளது. அதைவிட, போர்க்காலத்தில் நீண்ட வரிசையில் நின்று அடையாள அட்டை காட்டிய பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு போவதைப்போலவே, இந்தமுறை திருக்கேதீச்சரத்திலும் பூஸ்டர் டோஸை செலுத்திய அட்டையை வரிசையில் நின்று காட்டிவிட்டுத்தான் உள்ளே போகவேண்டுமென்றால், அதற்கு மிக நீண்ட நேரமெடுக்கும். இவற்றால் கேதீச்சரம் செல்லும் பக்தர்களின் எண்ணிக்கையில் பெருவீழ்ச்சி உண்டாகும்.

இந்த நிலையில் கொரோனாக் கொத்தணியைத் தடுக்கும் மாற்று வழிகளை கண்டறிவதோடு, பக்தர்களை சிரமத்துக்கு உள்ளாக்காமல் கேதீச்சரத்துக்குள் அனுமதிக்கவும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். பூஸ்டர் டோஸ் ஏற்றியிருக்க வேண்டும் என்பதைத் தளர்த்தி, ஒரு தடுப்பூசியையாவது செலுத்தியிருந்தால் போதும் என்ற தளர்வை ஏற்படுத்தல், ஆலயத்தில் தடுப்பூசி அட்டையைப் பரிசீலித்து காலதாமதத்தை உண்டாக்காமல் மன்னாருக்கு நுழையும் வழிகளில் உள்ள தடை முகாம்களில் பயணிகளின் வாகனங்களைச் சோதனையிடும்போதே தடுப்பூசி அட்டைகளையும் பரிசீலித்தல், ஆலய வளாகத்தில் தனியாள் இடைவெளி பேணல் போன்றவற்றை மேற்கொள்வதன் மூலம், சிவராத்திரி நிகழ்வின் ஆன்மாவைச் சிதையவிடாமல் பேண முடியும். ஏனெனில் ஆலயங்களும், அவற்றில் நடைபெறும் திருவிழாக்களும் வெறுமனே கட்டடங்களாலும், பூஜைகளாலும் முழுமை பெறுவதில்லை. பக்தர்களின் திரள்வும், அவர்களின் ஒன்றுபட்ட உணர்வுபூர்வமான பக்தியின் லயிப்புமே ஆலயங்களுக்கும், அங்கு இடம்பெறும் திருவிழாக்களுக்கும் உயிரூட்டுகின்றன. அதை மனதில் இருத்தி, பக்தர்களின் வருகைக்கு இடையூறில்லாத வழிவகைகளை உரியவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்பதே பலரினதும் எதிர்பார்ப்பு.



# மாகாணத் தேர்தலுக்கு விரைந்து தயாராகுக!

### சகாக்களை உஷார்படுத்துகிறது மொட்டுக் கட்சி

**கொழும்பு, பெப். 21**

**மாகாணசபைத் தேர்தலுக்கு தயாராக இருக்குமாறு பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுக்கு கட்சியின் மேல்மட்டத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்பதால் தற்போதில் இருந்தே ஏற்பாட்டுப் பணிகளை ஆரம்பிக்குமாறும் கூறப்பட்டுள்ளது.**

அத்துடன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களுக்கான விசேட கூட்டமொன்று பஸில் ராஜபக்ச தலைமையில் விரைவில் கொழும்பில் இடம்பெறவுள்ளது. அந்தக் கூட்டத்தின் பின்னரே வேட்பாளர் தேர்வு குறித்து முடிவெடுக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, முதலமைச்சர் வேட்பாளர்கள் தொடர்பிலும் தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. ஊவா, தென் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களே முதல்வர் வேட்பாளர்களாக களமிறங்கவுள்ளனர் எனவும், பதவி துறப்பது தொடர்பில் கட்சி மேல்மட்டத்துக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

பழைய முறையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதற்கான சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர், தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும் என்றும் தெரியவருகின்றது. (ம-44)

## ஜெனிவாத் தொடரை இலக்குவைத்து கறுப்புப் புள்ளியை ஏற்படுத்த முயற்சி!

கொழும்பு, பெப். 21

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் சமயத்தில், இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் கறுப்புப் புள்ளியை ஏற்ப டுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இன்றளவிலும் தொடர்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் செயான் சேமிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவைவருமாறு, 'சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி போலித்தகவல்களை சமூகமயப்படுத்தும் நடவடிக்கை இன்னும் நிறுத்தப்படவில்லை.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடர் நடைபெறும் காலப்பகுதியில், இலங்கையில் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் கறுப்புப்புள்ளியை ஏற்படுத்துவதற்கு சில குழுக்கள் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டுவருகின்றன.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம் மீண்டெழுவதை அந்தக்குழுக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

இதனால் சமூகவலைத்தளங்களில் கடத்தல்கள் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் பதிவிடப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கை தனி நபருக்கு இலாபமாக இருக்கலாம். ஆனால், இராஜதந்திர மட்டத்தில் அது நாட்டுக்கு தாக்கமாகவே அமையும்.

எனவே, ஊடகங்களுக்கு ஒழுக்கக்கோவை இருப்பது போல, சமூக ஊடகங்களுக்கும் அவ்வாறான ஒழுக்கக்கோவை அவசியம்- என்றார். (ம-44)

நாளை 22.02.2022
செவ்வாய்க்கிழமை
மாசி 10

சுபநேரம் : 11.01 - 12.31
ராகுகாலம்: 03.31 - 05.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொன்பாஸ் மக்களை ரஷ்யாவுக்குள் இடம்பெயருமாறு கட்டாய உத்தரவு!

## உக்ரைனுக்குள் தனிநாடுகளை அங்கீகரிக்கத் தயாராகிறது ரஷ்யா

**மொஸ்கோ, பெப். 21**

**கிழக்கு ஐரோப்பியப் போர் நெருக்கடி இப்போதைக்கு முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீண்ட காலம் இழுபடக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.**

உக்ரைன் எல்லையில் இருந்து தனது படைகளைத் திருப்பி அழைப்பதாக ரஷ்யா அறிவித்த பின்னர், உக்ரைனின் கிழக்கில் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தன்னாட்சிப் பிராந்தியங்களில் ஷெல் தாக்குதல்கள் தொடங்கியிருக்கின்றன.

உக்ரைன் படைகளே தாக்குதலைத் தொடங்கியிருப்பதாகக் கிளர்ச்சியாளர்கள் தரப்பும் கிளர்ச்சிப் படைகளே ரஷ்யாவின் தூண்டுதலில் ஷெல் வீச்சுக்களை நடத்துகின்றனர் என உக்ரைனும் மாறிமாறிக் குற்றஞ் சுமத்தி வருகின்றன.

பதற்றத்தைத் தணிப்பதாகக் கூறிவிட்டு போரை ஆரம்பிப்பதற்குச் சாக்குப்போக்கான காரணம் ஒன்றை உருவாக்குவதில் ரஷ்யா ஈடுபட்டு வருகிறது என்று அமெரிக்கா கூறியிருக்கிறது. தனது படைகள் எல்லை மீறிச் செல்வதற்கு வாய்ப்பான ஒரு கள நிலைவரத்தை கிளர்ச்சியாளர் வசம் உள்ள இரண்டு தன்னாட்சிப் பிராந்தியங்களிலும் உருவாக்கி அதன்மூலம் அங்கு தனது படைகளை நகர்த்துவது மொஸ்கோவின் இராணுவ உத்தியாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

டொன்பாஸ் என்பது ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள உக்ரைனின் கிழக்குப் பிராந்தி யம். 2014ஆம் ஆண்டில் கிரீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்த சமயத்தில் உக்ரைன் படைகளுக்கும் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே இங்கு போர் மூண்டன.

அச்சமயம் டொன்பாஸ் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய இரண்டு பகுதிகள் கிளர்ச்சிப் படைகளது வசமாகின.

அவற்றை அவர்கள் ரஷ்யாவின் ஆதரவோடு தன்னாட்சிக் குடியரசுகளாக நிர்வகித்து வருகின்றனர்.

உள்நாட்டுக்குள்ளேயே தனது சொந்த டொன்பாஸ் பிராந்திய மக்களை உக்ரைன் படைகள் கொடுமைப்படுத்தி இனப்படுகொலை புரிந்து வருகின்றன என்று மொஸ்கோ குற்றஞ் சுமத்தி வருகிறது.

டொன்பாஸ் நெருக்கடியைத் தணிப்பதற்கு சர்வதேச முயற்சியுடன் உருவாக்கப்பட்ட மின்ஸ்க் உடன்படிக்கையை ரஷ்யாவும் உக்ரைனும் மதித்துப் பின்பற்றவில்லை. இப்போது 8 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பிராந்தியம் ஐரோப்பியப் போர் ஒன்றுக்கான மையமாக மாறியிருக்கிறது. ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சிப் படைகளால் நிர்வகிக்கப்படு கின்ற டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் இரண்டிலும் போர் பதற்றத்தை அதிகரித்து அந்த மக்களை ரஷ்யாவுக்குள் வெளியேற்றுகின்ற முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதலில் பெண்கள் குழந்தைகள், வயோதிபர்களை வெளியேறுமாறு கிளர்ச்சித் தலைவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனால் அங்கு வசிக்கும் பல லட்சம் மக்கள் பெரும் இடப்பெயர்வு அவலம் ஒன்றுக்கான ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். ஆண்கள் அனைவரையும் போருக்கு அணிவகுக்குமாறு கிளர்ச்சி யாளர்கள் உத்தரவிட்டிருப்பதால் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

*பாரிஸிலிருந்து குமாரதாஸன்*




# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 08 . 04 . 1950



விண்ணில் 23 . 01 . 2022

## அமரர் பரமேஸ்வரி விநாயகமூர்த்தி

தாயுமாகி தந்தையுமான எம் தெய்வமே!
குலம் காத்த குலவிளக்காய்
நல்வழிகாட்டிய கலங்கரை விளக்காய்
மருமக்களுக்கு இன்னொரு தாயாய்
பேரர்களுக்கு வழிகாட்டும் குருவாய்
சமூகத்திற்கு சிறந்த முன்னோடியாய்
புன்சிரிப்புடன் இறுதி வரை நீங்கள் செய்த
தியாகங்களுக்கு ஏது கைம்மாறு?
ஞாலம் உள்ளவரை
உங்கள் நினைவில் வாழ்வோம்....

எங்கள் குடும்பத் தலைவியின் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தவர்கள். தொலைபேசியில் அழைத்து ஆறுதல்படுத்தியவர்கள். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள். மலர் அஞ்சலி வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள். கண்ணீர் அஞ்சலி அறிக்கைகள் மற்றும் பதாகைகள் வழங்கியவர்கள். சமூக வலைத்தளங்களில் தமது அனுதாபங்களை பகிர்ந்தவர்கள் தேவையறிந்து உதவிகள் புரிந்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கைதடி நாவற்குழி, கைதடி,
(மறவன்புலவு)

குடும்பத்தினர்

# ராஜஸ்தானில் ஆற்றில் கவிழ்ந்தது கார்; மணமகன் உட்பட 9 பேர் உயிரிழப்பு

ராஜஸ்தான், பெப்.21

ராஜஸ்தான் மாநிலத்தில் மணப்பெண்ணை அழைத்துவர மணமகன் உட்பட பயணித்த கார் திடீரென கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளா கியுள்து.

இதில் பயணித்த மணமகன் உட்பட 9 பேரும் உயிரிழந்துள்ளனர். இரவுநேரம் என்பதால் கார் விபத்துக்குள்ளானமை குறித்து யாருக்கும் தெரியவில்லை எனவும் நீண்டநேரத்தின் பின் தெரியவந்துள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலி ஸார் ஆற்றில் மூழ்கிய காரை கிரேன் உதவியுடன் மீட்டுள்ளனர். மேலும், ஆற்றில் மூழ்கி இறந்து கிடந்த 9 பேரின் சடலங்களையும் மீட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பிவைத்துள்ளனர்.

(ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பாராட்டு கிடைக்கும். முன்னேறும் எண்ணம் உருவாகும். நேர்மை காரணமாக பணியிடத்தில் நல்ல பெயர் எடுப்பீர்கள். குடும்பத்தினருடன் நல்ல புரிதல் ஏற்பட்டு நிம்மதி தரும்

**இடபம்:** புதிய நபர் ஒருவர் அறிமுகமாவார். சேமிப்பில் ஆர்வம் கூடும். பணிச்சுமை குறையும். மனஅழுத்தம் தீரும். உற்சாகம் கூடும். சிலருக்கு புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**மிதுனம் :** எதிர்பாராத உதவிகள் கிடைப்பதால் உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் திருமணப் பேச்சு சாதகமாக முடியும். நன்மை உண்டாகும்.

**கடகம்:** இளைஞர்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். மனபலம் பெருகும். அழகுணர்ச்சி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**சிம்மம்:** மேலதிகாரி ஒருவரால் நன்மையும், லாபமும் பெறுவீர்கள். அனைவரும் பாராட்டும்படியான செயல் ஒன்றைச் செய்வீர்கள். உறவினர்களின் செயல்கள் மகிழ்ச்சியை கொடுக்கும்.

**கன்னி:** வீட்டில் சில மாற்றங்களை செய்து அழகைக் கூட்டுவீர்கள். குழம்பியிருந்த மனம் தெளிவு பெறும்படியான நிகழ்வு இன்று நடக்கும். சக ஊழியர்களுடன் இருந்த கசப்பு நீங்கி ஒற்றுமை பிறக்கும்.

**துலாம்:** புதிய விஷயம் கற்பீர்கள். மனம் அமைதி அடையும். புதிதாக நல்ல பழக்கம் ஒன்றைக் கைகொள்ள ஆரம்பிப்பீர்கள். தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** சகஊழியர்களுக்கு உதவி செய்து அவர்களை நெகிழ வைப்பீர்கள். புது நட்பு மலரும். உறவினர் உங்களைத் தேடி வருவர். பிறரை நியாயமாக நடத்துவீர்கள். நண்பரால் நன்மை கிடைக்கும்.

**தனுசு:** எந்த விஷயமும் சிறு தடைக்குப் பிறகே நிறைவேறும். அதிகமாக யோசித்து குழம்புவீர்கள். நேற்றைய கவலை தீரும். சிரமத்தில் உள்ள ஒருவரைக் காப்பாற்றுவீர்கள்.

**மகரம்:** துணிச்சலுடன் செயற்பட்டு உங்கள் மீதுள்ள பழியை நீக்கிக் கொள்வீர்கள். உற்சாகம் குறையாத நாள். புதிய இனங்களில் முதலீடு செய்வீர்கள். அவசரப்பட்டு பேசி நல்ல மனிதர்களை இழக்க வேண்டாம்.

**கும்பம்:** சிலருடைய உண்மை முகம் தெரிந்து வருந்துவீர்கள். தட்டிக் கேட்பதாக நினைத்து யார் மனதையும் புண்படுத்த வேண்டாம். இளைஞர்களுக்கு நல்வழி காட்டும் ஒருவர் கிடைப்பார்.

**மீனம்:** பகைதீரும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். வாழ்வில் உயர்வதற்கான வழிகளை செயற்படுத்த ஆரம்பிப்பீர்கள். கலகலப்பான நாளாக அமையும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமைமாவுக்கு தட்டுப்பாடு பாணின் விலை 400 ரூபா?



**கொழும்பு, பெப். 21**

**இலங்கையில் பாணின் விலை 400 ரூபா வரை அதிகரிக்கலாம் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கோதுமை மாவுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள பேக்கரிகளுக்குத் தேவையான மாவில் 75 வீதம் மாத்திரமே பெறப்படுகின்றது.
அதனால் பேக்கரித் தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.
இதன் காரணமாக பேக்கரி உற்பத்திகள் குறைக்கப்பட்டுள்ளன.
அவற்றின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
இன்று ஒரு இறாத்தல் பாண் 100 ரூபாவுக்கு விற்கப்பட்டாலும், எதிர்காலத்தில் அதனை 300, 400 ரூபாவுக்குக் கூட வாங்க முடியாது.
எனவே கோதுமை மாவுக்கான கட்டுப்பாட்டு விலையை விரைவில் நடைமுறைப்படுத்தி, மாவின் விலையைக் கட்டுப்படுத்த அரசு தலையிட வேண்டும்என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-4-இ)

## ரஜீவனின் சிறுகதை தொகுப்பு விரைவில்

முல்லைத்தீவு, பெப். 21
ஈழத்தின் வலிகளை நினைவுபடுத்தி, வவுனியூர் ரஜீவனின் 'கன்னத்தின் காயங்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது.
இவர் செஞ்சோலை பாடல் மற்றும் சுனாமி நினைவுப் பாடல் என பல்வேறு பாடல்களையும் எழுதியுள்ளார். தற்போது அவரின் அடுத்த படைப்பாக கன்னத்தின் காயங்கள் என்ற இந்த சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,19)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 21
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால், 2022 ஆம் ஆண்டுக்கான கலைஞர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றங்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள், வடக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள், வடக்கு மாகாண கலைக்குரிசில் விருது, வடக்கு மாகாண இளம் கலைஞர் விருது, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, வடக்கு மாகாண நூற்கொள்வனவு, நடுவர் தெரிவு ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும், கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2022 இன் கீழ் வழங்கப்படவுள்ள கலை மன்ற அபிவிருத்தி நிதி, கலைஞர் ஊக்குவிப்பு நிதி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.
**விண்ணப்பப்படிவங்களை வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்று எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ அறிவித்துள்ளார்.** (எ-ரி1)

# மலையக மக்களின் இருப்பை பாதுகாக்க சங்கிலிப் போராட்டம்

கொழும்பு, பெப்.21
மலையக மக்களின் இருப்பைப் பாதுகாக்க முன்னெடுக்கப்படும் சங்கிலிப் போராட்டத்துக்கு, அனைவரும் பேராதரவு வழங்க வேண்டும் என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினர், தோட்டப்பகுதிகளுக்குப் பயணம் மேற்கொண்டு, நாட்டு நிலைவரம் மற்றும் தொழில்சார் விடயங்கள் குறித்தும் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர். நுவரெலியா, நானுஓயா தோட்டப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட தெளிவூட்டல் நடவடிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
மலையக மக்களுக்கு எதிராக அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அடக்குமுறைகள், மிகைவரி சட்டவரைவின் ஊடாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் கை வைப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்குத் தெளிவுப்படுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். எமக்கு வண்ணங்களோ, சின்னங்களோ முக்கியமில்லை. மக்களின் எண்ணங்கள் தான் முக்கியம். எனவே, கட்சிபேதமின்றி அனைவரும் இதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.
இந்த நாட்டில் மாற்றமொன்று அவசியம். அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது. எனவே, முடியுமானால் தேர்தலொன்றை நடத்துமாறு அரசுக்கு சவால் விடுக்கின்றோம். அது எந்தத் தேர்தலாக இருந்தாலும் பரவாயில்லை, நடத்தினால் மக்கள் சக்தி எந்தப் பக்கம் என்பது தெரியவரும்.
அதேவேளை, மலையகத்தில் ஒரு பகுதியினருக்கு மட்டும் கோதுமை மா நிவாரணம் வழங்கும் நடைமுறை ஏற்புடையதல்ல. அனைத்து தரப்பினருக்கும் அது வழங்கப்பட வேண்டும் - என்றார். (எ-4-இ)

# சட்டவிரோத வேலி அகற்றப்பட்டது

மட்டக்களப்பு, பெப். 21
கோறளைப்பற்று மஜ்மாநகர் பிரதேசத்திலுள்ள புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட வேலி புகையிரத திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்புப் பிரிவினரால் அகற்றப்பட்டது.
புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான காணியில் 15 நபர்கள் இணைந்து சட்டவிரோதமாக வேலி அமைத்துள்ளனர்.
இதனையடுத்து பொலிஸார் மற்றும் புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து குறித்த காணிக்குள் அமைக்கப்பட்ட வேலியை அகற்றியுள்ளனர். (எ-ரி1-150)

# அறிகுறிகளுக்கு ஏற்றவாறான மருந்துகளை உட்கொள்ளுக

### *சுகாதாரப்பிரிவு ஆலோசனை*

கொழும்பு, பெப்.21
கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுபவர்கள், அறிகுறிகளுக்கு ஏற்ப மருந்துகளை உட்கொள்வது பொருத்தமானது என்று சுகாதாரப் பிரிவு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.
கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுபவர்கள், மருத்துவரின் பரிந்துரை இன்றி, மீள்சக்திக்கான எந்தவொரு மருந்துகளையும் உட்கொள்ளவேண்டாம். அறிகுறிகளுக்குப் பொருத்தமான மருந்துகளை உட்கொள்வது சிறந்தது என்று இயன் மருத்துவர் பிரியங்கர ஜயவர்தன தெரிவித்துள்ளார்.
அதேவேளை, தற்போது 3 வகையான தொற்றுக்கள் சமூகத்தில் பரவியுள்ளமை தொடர்பிலும் சுகாதாரப்பிரிவு எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4-இ)

# சீனாவின் நட்புறவால் ஆசியாவே மாறியது

### *மஹிந்த பெருமிதம்*



கொழும்பு, பெப்.21
சீனா நாடுகளுக்கிடையில் நட்புறவு மற்றும் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதால், முழு ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
சீன-இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு நிறைவையும், இறப்பர் அரிசி ஒப்பந்தத்தின் 70ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு, தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
சீனா நீண்ட வரலாற்றைக்கொண்ட ஒரு நாடு. சீனா ஒரு பெரிய நாடாக இருந்தபோதிலும், எந்த நாட்டையும் ஒரு போதும் ஆக்கிரமித்ததில்லை. அதேபோன்று தனது தாய்நாட்டை எந்த அந்நிய சக்திக்கும் அடிபணியவும் அனுமதிக்கவில்லை.
இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு 2 ஆயிரம் வருடங்களுக்கு முன்னிருந்தே காணப்படுகின்றது. பௌத்தம், வர்த்தகம் மற்றும் கலாசார உறவுகள்மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வளர்ந்துள்ளது.
கடந்த தசாப்தத்தில் சீனா இரண்டு புதிய பொருளாதாரத் திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. முதலில் புதிய பட்டுப்பாதைத் திட்டம். இரண்டாவது தீவிர வறுமை ஒழிப்புத்திட்டம். சீனாவால் ஒட்டுமொத்த ஆசியாவும் மாற்றம் பெற்றுள்ளது.
சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை தொடர்ந்து வலுப்படுத்துவது எமது எதிர்பார்ப்பும், பொறுப்புமாகும் -என்றார். (எ-4-இ)

# அமெரிக்க உயர் அதிகாரி மார்ச் மாதம் இலங்கைக்கு

கொழும்பு, பெப்.21
பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு அடுத்த மாதம் பயணிக்கவுள்ளேன் என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் லூ உறுதிப்படுத்தியுள்ளார்.
இவர் இலங்கைக்கான பயணத்தில், மனித உரிமைகள் மற்றும் இருதரப்பு வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் அவதானம் செலுத்துவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஏற்கனவே, இலங்கை தொடர்பான அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையில், மனித உரிமைகள் முக்கியமானவை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜூலி சுங் கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், உயர் அதிகாரியொருவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

**8ஆம் ஆண்டு**

பிறப்பு 30.09.1937 இறப்பு 19.02.2014

**3ஆம் ஆண்டு**

பிறப்பு 08.09.1947 இறப்பு 18.12.2018





## அமரர் பொன்னர் அப்பையா

**(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்)**
**சமாதான நீதிவான்**
**திதி- பஞ்சமி (21.02.2022)**

## அப்பையா யோகேஸ்வரி

அன்பு கொண்ட எங்கள் அப்பா!
உங்கள் ஆஸைமுகம் மறைந்து
ஆண்டுகள் எட்டு கடந்தனவோ?
எம்குலம் தழைத்தோங்கச் செய்தீர்கள்
இன்று உம் விழுதுகளின் உயர்வுகளைக் காண
நீங்கள் எம்மோடு இல்லையென்று ஏங்குகின்றோம்
செல்லுமிடமெல்லாம் அம்மாவைத் துணைக்கு
அழைத்து சென்றது போல
வானுலகிற்கும் வரவழைத்தீர்களோ?
விழிமூடி எம்மை வழிகாட்டும் தாயே!
உங்கள் மடி தேடி வந்த பிள்ளைகள் தவிக்கின்றார்கள்
என்றும் எம்மோடு ஒன்றாகித் துணையாகி ஆதரவாய்
நின்று வழிகாட்டுங்கள் வானுறையும் தெய்வங்களே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**'அம்பிகை வாசா'**
**புலோலி தென்மேற்கு,**
**புலோலி**

**உங்கள்**
**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரம் திலகவதி

மலர்வு 30 . 11 . 1942



உதிர்வு 19 . 02 . 2022

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் திலகவதி அவர்கள் 19.02.2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு மாரிமுத்து தம்பதிகளின் அன்பு புதல்வியும் சின்னத்தம்பி கந்தாத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் சரோஜா, தேவிகா, வசந்தகுமார் (லண்டன்) விஜயகுமார் (லண்டன்), சித்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பகவதி மற்றும் புனிதவதி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சபாபதி, ஆறுமுகம், நடராஜா மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம்), செல்வி (லண்டன்), தயாளினி (லண்டன்), நகுலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தஷாங்கன், கிருத்திகா, கீர்த்தனா , கார்த்திகா, கஜலக்சிகா, யாஷ்னிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.02.2022 செவ்வாய்க்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**077 4542223**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## திருமதி மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு



வேலணையைப் பிறப்பிடமாகவும் மூத்த விநாயகர் வீதி மற்றும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையற்கரசி திருநாவுக்கரசு 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், லக்சுமி ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும் கஸ்தூரி, அஜந்தன் (பிரான்ஸ்), அனுஷன், மயூரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் கணேசலிங்கம், சிவநாதன் (லண்டன்) மனோகரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (லண்டன்), மஞ்சுளா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சதீபன், கோகிலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ரதி, மகாலக்சுமி (லண்டன்), சுசிலாதேவி (பிரான்ஸ், செல்வமலர் (லண்டன்), கனகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஜனோசா, வினோஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 21.02.2022 திங்கட்கிழமை 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாவலர் வீதி,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## கதிரவேலு நாகராசா



**தோற்றம் 10.05.1932 மறைவு 20.02.2022**

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நாகராசா (20.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு முத்துப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சீதேவி தம்பதிகளின் மருமகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் புஸ்பராகினி, இன்பராகினி, விஜயராகினி, விஜயகுமார், சாந்தராகினி, சூரியகுமார் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), கார்த்திகாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, கண்மணி, பொன்னம்மா, பழனி மற்றும் வள்ளிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் கோணலிங்கம், விக்கினேஸ்வரமூர்த்தி, சௌந்தர்ராஜா, பிரபா, கௌரி, சஞ்சீவன் ஆகியோரின் மாமனாரும் லவப்பிரியா, மயூரன், வினோதரன், திருக்குமரன், அரவிந்தன், தாரங்கினி, லவலக்ஷனா, பிரவீனா, அபிலக்ஷன், மமிஷா, திஷானி, தஷ்மிகா, பிரஜன் ஆகியோரின் பேரனும் அனனியா, அட்ஷகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.02.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**நாவற்குழி, கைதடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**0771606429**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சாத்தியமற்றவை!

## மின்துண்டிப்பைத் தவிர்க்க முடியாது என மின்சாரசபை பொறியியலாளர் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.21**

**மின் விநியோகத்தை தடைசெய்யாமல் இருப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு முன்வைத்துள்ள யோசனைகளை செயற்படுத்துவது நடைமுறைக்கு பொருத்தமற்றதாக அமையும். எரிபொருள் பற்றாக்குறை, மின்னுற்பத்தி நிலையங்கள் செயலிழத்தல் உள்ளிட்ட காரணிகளால் எதிர்வரும் நாள்களில் மின் விநியோகத்தைத் துண்டிக்கநேரிடும்**

இவ்வாறு மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார பொறியியலாளர் சங்கத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வறட்சியான காலநிலை தொடர்வதால் நீர் மின்னுற்பத்தி பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த மாதம் முதல் எதிர்வரும் இரு மாதங்களுக்கு நாளாந்தம் குறைந்தபட்சம் 45 நிமிடங்களாவது மின் விநியோகத்தைத் துண்டிப்பதற்கு இலங்கை மின்சாரசபை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு எரிபொருளை விநியோகிக்க இணக்கம் தெரிவித்ததால் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு திட்டமிட்ட மின்விநியோக துண்டிப்புக்கு அனுமதி வழங்கவில்லை. தேசிய மின்னுற்பத்தி மற்றும் மின்விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு முன்வைத்துள்ள யோசனைகளைச் செயற்படுத்துவது நடைமுறைக்குச் சாத்தியமற்றதாக அமையும்.

வீதிகளில் உள்ள தெரு விளக்குகளின் பயன்பாட்டை 80 சதவீதத்தால் குறைத்தல்,சகல அரச நிறுவனங்களிலும் உள்ள குளிரூட்டி இயந்திரங்களை பிற்பகல் 2.30 மணிமுதல் மாலை 4.30 வரையான காலப்பகுதியில் செயலிழக்க செய்தல் உள்ளிட்ட யோசனைகளை செயற்படுத்துவது எந்தளவுக்கு சாத்தியப்படும்- என்றார்.(எ-இ)

# சபைக்குரிய காணியால் வருமானத்தை ஈட்டுக

## உறுப்பினர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.21

சங்கானைப் பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள பிரதேசசபைக்குச் சொந்தமான நிலப்பரப்பு வருமானம் ஈட்டும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் துவாரகாதேவி ஜெயகாந்தன் வலியுறுத்தியுள்ளார்.

வலி.மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சங்கானைப் பேருந்து நிலையம் அமைந்துள்ள பிரதேசசபைக்குச் சொந்தமான காணியிலுள்ள ஆலயத்தை பலர் உரிமைகோரி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டிய அவர், ஆலயத்தின் பொறுப்பைச் சபை ஏற்று நடத்தவேண்டும் என்றும் அங்காடிகளை அமைத்து சபைக்கு வருமானம் ஈட்டும் வழிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதேவேளை குறித்த ஆலயம் மது அருந்துதல் உட்பட சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு சிலரால் பயன்படுத்தப்படுகிறது என பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன என சபையின் உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன் இதன்போது தெரிவித்திருந்தார். (வ-125)

# பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால், வீட்டு மின்னிணைப்பு மற்றும் தையல் பயிற்சி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கமைய வீட்டு மின்னிணைப்புப் பயிற்சிகள் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையிலும் தையல் பயிற்சி வகுப்புகள் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளையோர், போதானாசிரியர்கள் ஆகியோர் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தை தென்மராட்சி கல்வி வலயத்திலும் , தையல் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்திலும் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார். (ஒ-ரி1-9)

# இந்து மதத்துக்கு எதிரான அநீதி அரசியல் தலையீடுகள் அவசியம்

## இந்து அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.21

இந்து மதத்தின் தனித்துவத்துக்கு, புனிதத்துக்கு ஏனைய மதங்களால் ஏற்படுத்தப்படும் அநீதிகளை நிறுத்துவதற்கு, அரசியல் ரீதியான செயற்பாடு களை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் சைவப் பேரவை, சைவ மகா சபை ஆகியவற்றின் உயர் மட்டக் குழுவினர் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்தனர்.



இதன்போது திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி விவகாரம், மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

தமிழ்ச்சைவப் பேரவைத் தலைவர் மேனாள் நீதிபதி இ.வசந்தசேனன், பிரதித் தலைவர் முன்னாள் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், பொதுச் செயலாளர் மருத்துவர் தி.சுதர்மன், சைவ மகா சபைத் தலைவர் நா.சண்முகரத்தினம், பொதுச் செயலாளர் மருத்துவர் பராநந்தகுமார் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். (ஒ-4-125)

# 13 மாவட்டங்களில் கித்துள் சார் உற்பத்தி

கொழும்பு,பெப்.21

நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில், 13 மாவட்டங்களில் மனைக் கைத்தொழிலாக கித்துள் சார் உற்பத்திகள் தயாரிக்கப்படவுள்ளன.

'வளமான கித்துள் - நிலையான நாடு' என்ற தொனிப்பொருளை மையப்படுத்தி, கித்துள் அபிவிருத்திச் சபையின் எதிர்காலத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக கித்துள் அபிவிருத்திச் சபையின் எதிர்காலத் திட்ட வரைவு பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

காலி - அக்மீமன ஹியாரே நீர்த்தேக்கத்துக்கு அருகில் இடம்பெற்ற நிகழ்வில், கித்துள் பாணி உற்பத்திக்கான 'இலங்கைத் தரம்' அறிமுகப்படுத்தப்படும் வகையிலான 'தரச் சான்றிதழ்' ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

பெருந்தோட்டக் கைத்தொழில் பயிற்சி நிறுவனத்திடம் இருந்து கித்துள் அறுவடை தொடர்பில் பயிற்சி பெற்ற மூவருக்கான சான்றிதழ்களும், தொழிற்றுறையினர் ஐவருக்கான தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது கித்துள் உற்பத்திகள் அடங்கிய பேழையொன்று, ஜனாதிபதிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது. (எ-4-இ)





வெளிநாடுகளுக்கிடையில் இலங்கை வர்த்தக நாமத்துடன் பற்றிக், கைத்தறித் துணிகள் மற்றும் வடிவமைப்புக்களை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கமாகக்கொண்டு இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கைவினைப் பொருள்களை வழங்கும் நிகழ்வு பற்றிக், கைத்தறித் துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19
08
1936



மறைவு
18
02
2022

## திருமதி சங்கரலிங்கம் மகாதேவி

யாழ்.சரவணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பெரேரா வீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.40A. இரண்டாம் குறுக்குத்தெரு வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சங்கரலிங்கம் மகாதேவி அவர்கள் கடந்த (18.02.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்றவர்களான திரு.திருமதி திருநாவுக்கரசு தம்பதியரின் அன்பு மகளும் திரு.திருமதி தம்பையா தம்பதியரின் பாசமிகு மருமகளும். சிவசுதன். தயா. லதா. கவிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான இரட்சணியதேவி. கிருபாதேவி. தவநாயகம். கமலாதேவி மற்றும் தற்பராதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரியும். ஸ்ரீதீபா. ஜீவாகரன். குகநாதன் (உதயன்) ஆகியோரின் அன்பு மாமியாரும். காலஞ்சென்ற கலைமகள் அவர்களின் அன்பு மைத்துனியும். நிருஷா. ரேணுஷா. சாயிதன். ஜெனிபர். ஜெரோஜிதா. அனிஷா.அனுஜன். அருஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (21.02.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.40A. இரண்டாம் குறுக்குத்தெரு. வவுனியாவில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியை களுக்காக தட்சனாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
உதயன் (வவுனியா - மருமகன்)
Mobile : + 94771605110
Mobile : +94774053666

(ex.37116) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
08
-
03
-
1963



இறப்பு
18
-
02
-
2022

## திரு. மரியநாயகம் ஜெகநாதன்

யாழ். சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Zurich ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் ஜெகநாதன் அவர்கள் 18.02.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற வேலாயுதம். புவனேஸ்வரி (சுவிஸ்) தம்பதிகளின் அன்பு மருமகனும். தயாளினி (சுவிஸ்) அவர்களின் அன்புக் கணவரும். நிஜேதா (சுவிஸ்) அவர்களின் அன்புத் தந்தையும். காலஞ்சென்ற அகிலாண்டதேவி. வர்ணகுலசிங்கம். சந்திரகுமார். காலஞ்சென்ற யோகநாதன். பிரமிலாதேவி. தாயரஞ்சன் (சுவிஸ்). கௌசலாதேவி (டென்மார்க்). காலஞ்சென்ற நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும். காலஞ்சென்றவர்களான அன்ரன் ஜெயரட்ணம். திருச்செல்வம். அருந்தவ மலர் மற்றும் சயானந்தன் (டென்மார்க்). கிருபாகரன் (சுவிஸ்). ஜெயந்தினி. வசந்தகுமாரி. அழகேஸ்வரி சிவானந்தமலர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை (23.02.2022) Kaferhol25frasse153, 8046 zurich, switzerland. வில் தகன கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலங்கை வங்கி
முன் ஒழுங்கை,
சுன்னாகம்

(CS 104691) (4)

தகவல்:
சந்திரகுமார் (சகோதரன்)
077 736 6986

# மரண அறிவித்தல்

தோற்றம்
09
01
1926



மறைவு
20
02
2022

## விசுவநாதி செல்லத்துரை

(வி.செல்லத்துரை Stores - உரிமையாளர்)

மணக்கும்பான்னை பிறப்பிடமாகவும் 613. நாவலர் வீதி. நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவநாதி செல்லத்துரை (செல்லையா கடை - உரிமையாளர்) நேற்று (20.02.2022) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதி - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சுப்பையா - சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மருமகனும். சுந்தரியின் அன்புக் கணவரும். லோகநாயகி (கனடா). சந்திராதேவி. சற்குணராஜா [செல்லையா கடை - (V.செல்லத்துரை Stores)], இந்திராதேவி (கனடா). சுபத்திராதேவி (லண்டன்). சுரேந்திரராஜா (ஜேர்மனி). சதீஸ்குமார் ( STR electronic) ஆகியோரின் அன்புத் தந்தையும். ஜெயக்குமார். சிவம். யோகமலர். சிவநேசன். தயாரஞ்சன். ரஞ்சனா. ஜெயவதனி ஆகியோரின் அன்பு மாமனாரும். காலஞ்சென்ற தர்மலிங்கம். சபாபதிப்பிள்ளை. தவமணி. காலஞ்சென்ற பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்றவர்களான பாக்கியம். பொன்னுத்துரை. தர்மலிங்கம். செல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும். சங்கீதா. லக்சன். பிரதீஷா. திலக்ஷிகா. கிருஷாந். பிரிவியா. அபிநயா. பிரவீன். கௌசல்யன். லக்சியா. ஜஸ்மிதா. தரண்யன். ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.613, நாவலர் வீதி,
நல்லூர்.
(சீரடிசாயி முன்பாக)

(ex 43041) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்
077 315 1485

# மரண அறிவித்தல்

தோற்றம்
29
08
1944



மறைவு
18
02
2022

## யோசேப் மரியதாசன் (செல்லத்துரை)

இளவாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட யோசேப் மரியதாசன் (செல்லத்துரை) கடந்த 18.02.2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் - றோசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும். காலஞ்சென்ற கஸ்பார் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும். திரேசம்மாவின் அன்புக் கணவரும். காலஞ்சென்ற பொன்னுத்துரை. மரியம்மா மற்றும் பேபி. சின்னத்துரை. ராசமணி. அருமைத்துரை (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும். யூட்சி (ஆசிரியர் - இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்). ஜான்சி (ஆசிரியர் - கிளிநொச்சி கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலை). டயானா (அபிவிருத்தி உத்தியோத்தர் பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். பீற்றர் ஜஸ்ரின் (பொது முகாமையாளர் காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்). சுஜந்தன் (மின்னொட்டு. கட்டட ஒப்பந்ததாரர்). நியூட்டன் திலகரட்ணம் (தொழிநுட்பவியலாளர் டம்ரோ) ஆகியோரின் அன்பு மாமனாரும். பயஸ் ஜெனோசன். கிருசிகன் பயோ. துளசிகன்போல். கபோன் கியூ. அன்புச்செல்வி. ஜெய்சுதன். சந்தனா. டறோன் அன்ரனைஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2022) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இளவாலை புனித யூதாததேயு ஆயலத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யூதாததேயு சேமக்காலையில் நல்டைக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ex 43050) (2.6)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் நினைவலைகள்



பிறப்பு
21.11.1931

இறப்பு
24.01.2022

அமரர்
## சிதம்பரப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை

எமது தாயாரும் நாகர் கோவில் தெற்கு பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் அமரர் சிதம்பரப்பிள்ளை அவர்களின் துணைவியார் அமரர் சிவகாமிப்பிள்ளை (பாய்க்கியம்) அவர்களின் 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும், அந்தியேட்டியும் சபீண்டிகரண நிகழ்வும் அன்னாரின் பிறந்த இடமும் தற்காலிக வதிவிடமுமான மாசார் பளையில் நடைபெறவுள்ளது. அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (21.02.2022) திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று (23.02.2022) புதன்கிழமையன்று மாசார் பளை இல்லத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், சபீண்டிகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நாகர் கோவில்
தெற்கு.
உசன்,
மிருசுவில்.

பிள்ளைகள்
சி.சிவஞானசுந்தரம் - அவுஸ்ரேலியா
0061298632478
சி.ஈசுரபாதம் - அவுஸ்ரேலியா
0061469132436

(CR 7908) (3.6)

# நாடாளுமன்றத்தில் 100 பேருக்கு தொற்று

கொழும்பு, பெப். 21

நாடாளுமன்றத்தில் பணியாற்றுவோரில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 100ஐத் தாண்டியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமையும் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையின்போதே அவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, கொரொனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 54ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வீ. செல்வநாதன்

(ஓய்வுநிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர்)



அன்பின் அப்பா!
பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
ஆறுதல் இன்றி தவிக்கின்றோம்
ஆண்டுகள் எட்டாகிவிட்டது
நீர் எம்மை விட்டுப் பிரிந்து
நீங்கள் தந்த நினைவுகளை
நெஞ்சமதில் நாம் நினைத்து
நினைவாய் எம் மனதில் - அப்பா
நிலையாய் நீர் வாழுவீர்
ஆண்டவன் சந்நிதியில்
அமைதியில் இளைப்பாற - நாம்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மண்ணக வாழ்வு
25.07.1955

விண்ணக வாழ்வு
21.02.2014

குடும்பத்தினர்

(cs 43042) (2.6)

# கண்ணீர்த் துளிகளில் ஓராண்டு நிறைவு



தோற்றம்
09.07.1934

மறைவு
21.02.2021

## அமரர் கபிரியேல் செபஸ்ரியாம்பிள்ளை (செட்டியார்)

உன் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி கலங்குகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஒளிர்ந்தவனே!
நீர் அணைந்து ஓராண்டு
ஓடி மறைந்தாலும்
என்றும் உன் நினைவுடனே
வாழ்கின்றோம்
நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறைவனிடமும்
கலந்திட்ட உம் ஆன்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (21.02.2022) திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் மதியவிருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
இல.53, இராஜேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

# 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவில்லும்



தோற்றம்
27.02.1980

மறைவு
11.01.2022

## அமரர் குணபாலசிங்கம் கடம்பகுமார்

மாதகலைப் பிறப்பிடமாகவும் துறைமுக வீதியை வதிவிடமாகவும் கொண்ட, அமரர் குணபாலசிங்கம் கடம்பகுமார் அவர்கள் கடந்த (11.01.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணபாலசிங்கம் ஆனந்தலட்சுமியின் அன்பு மகனும், புஸ்ப்பராணியின் பெறாமகனும், கருணானந்தம் - மேரிகெலன் அவர்களின் அன்பு மருமகனும், துஷியந்தினியின் (சாவகச்சேரி நீதிமன்ற உத்தியோகத்தர்) பாசமிகு அன்புக் கணவரும், கிருத்திகன், கார்த்திக் ஆகியோரின் அன்புத்தந்தையும், சந்திரகுமார் (சுவிஸ்) காலஞ்சென்ற குலேந்திரகுமார் மற்றும் நந்தமாலா, சாந்தமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மினி, ரதீசன், சதீஸ்குமார், நவராஜன், கஜந்தினி, லக்‌ஷாயினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.02.2022) செவ்வாய்க்கிழமை, மாதகல் வன்னிப்பிள்ளையார் அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் (24.02.2022) வியாழக்கிழமை மாதகல் துறைமுக வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெற விருப்பதால், வீட்டுக்கிருத்திய மதிய போசனத்தில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்வதோடு இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அத்துடன் அன்னார் மறைந்த செய்தி கேட்டு, உடன் வருகை தந்தவர்களுக்கும் மற்றும் தொலைபேசி, பதாகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோர்க்கும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் தனியார் பஸ் உரிமையாளர்கள் பணியாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

துறைமுக வீதி, மாதகல்
077 445 4121

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நிதியாளர்
**அருட்தந்தை எட்வின்நாதன்** அவர்களின்
பாசமிகு அன்புத் தாயார்
**திருமதி எட்வேட்ராஜா பிலோமினா**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
(cr.37118) (2.6)

**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்கு

1. சட்டறிங் வேலைக்குரிய பொருட்கள் (சட்ட Board, 4"x2" bar மரம், 2"x2" நீப்பைகள்) 50 Sqr அடிக்கத்தக்கது.
2. Jack முட்டுக்கள் (இரும்பு) - 400Nos
3. Concrete mixer (New)
4. Hoisf with Stand Dtaly (New)
5. Rammer Robin
6. பைப்கள், சாரங்கள், தட்டுக்கள்
7. பழைய பனைமரங்கள்
8. 200' -0" x20' கொட்டகை
9. Block கல் அறுக்கும் இயந்திரம் 4", 5" அச்சுடன்
10. Tafe Tractor with out Box
11. பாலைத் தீராந்திகள் (பழையது)

**தொடர்புகளுக்கு 0774010047**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. ச. **கிருசாந்தன்** அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி சடாட்சரலிங்கம் ஞானமலர்**
அவர்கள் கடந்த (16.02.2022) புதன்கிழமை காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(cs.43045) (2.6)

**ஆசிரியர் வட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை
**திருமதி சிவதர்சினி பாலகிருஸ்ணன்**
அவர்களின் அன்பு மாமனார்
**அம்பலவாணர் பஞ்சாட்சரம்**
அவர்கள் கடந்த (17.02.2022) வியாழக்கிழமை காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(cs.43044) (2.6)

**ஆசிரியர் வட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் நிதியாளர் **அருட்தந்தை எட்வின்நாதன்**
அவர்களின் பாசமிகு அன்புத் தாயார்
**திருமதி எட்வேட்ராஜா பிலோமினா**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம் அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
(cr.37117) (2.6)

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி சமூகம், யாழ்ப்பாணம்.**

## பணியாளர்கள் தேவை

மானிப்பாய் பிரதேசத்தில் அமைந்துள்ள காட்வெயார் கடைக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
**கணக்காய்வாளர், பில்கிளாக், கேபிள் ரீவி திருத்துனர், ஆசாரிவேலையாட்கள், வாகனசாரதி, வெல்டிங்வேலையாட்கள், கொங்கிரீட்கல் அரிபவர்கள், பூச்சாடி,அலங்காரக்கற்கள் நிலைதிப்பு கல் தூண் அரிதல், ஆகிய வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.**
(cr.37117) (2.6)

**தொடர்புகளுக்கு: 0774573580**

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய நிர்வாகத் தெரிவு

கொழும்பு, பெப். 21

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. புதிய நிர்வாகத்தில் ஒன்றியத்தின் தலைவராக சிறீகஜன், செயலாளராக கு.ஜெயந்திரன், உபதலைவராக லியோதர்ஷன், உப செயலாளராக தர்மினி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் வடக்கு மாகாணத்தின் இணைப்பாளராக க.சர்வானந்தா, கிழக்கு மாகாணத்தின் இணைப்பாளராக சரவணபவன், மலையகத்தின் இணைப்பாளராக சிவகுமார் ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர். (ம-4-27)

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி நகரை அண்டிய கண்டுவில் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை
(CR 37113) (3/6)

**077 985 9218**

## உடனடி பயணம்



**கனடா, லண்டன்**

**ஐரோப்பிய நாடு ஒன்றிற்கான அவசர வேலை வாய்ப்பு**

(CTC) கப்பல் பயிற்சி பெற்றவர்கள்
கப்பலில் வேலை செய்தவர்களுக்கு விசேட உடனடி
குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் உடன் பயணம்

**Hotline 077 6222631**

## காணி விற்பனைக்கு

கைதடி இலங்கை வங்கிக்கு முன்பாக 20 பரப்பு காணி (2 ஆம் காணி ),கல்வியங்காட்டில் 80பரப்பு நெற்காணியும் விற்பனைக்குண்டு.

**0777037058**

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - (வரையறுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக கடமை புரியும் திரு.கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01 ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 19 கிளைகளுக்குமான கிளைக்குழுத்தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும், அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

### கிளைப்பொதுச்சபைக்கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்

கிளைப்பொதுக்கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும் 2022.03.06 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 01 | 01 | கொடிகாமம் | திரு.வேதநாயகம் பிரதீஸ்குமரன் | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை |
| 02 | 02 | கச்சாய் பாலாவி | திரு.அருளானந்தம் தயாளன் | யா/கச்சாய் அ.த.க. பாடசாலை |
| 03 | 03 | வினோபா | திரு.சின்னத்துரை குணாளன் | கச்சாய் கிராம முன்னேற்ற சங்க மண்டபம் |
| 04 | 04 | அல்லாரை | திரு.சண்முகம் சசீந்திரன் | யா/அல்லாரை அ.த.க. பாடசாலை |
| 05 | 05 | மந்துவில் மத்தி | திரு.தங்கராசா கண்ணதாசன் | யா/மந்துவில் றோமன் க.த.க பாடசாலை |
| 06 | 06 | மந்துவில் | திரு.சிங்கராசா சியாந்தன் | யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் |
| 07 | 07 | இயற்றாலை | திரு.சண்முகநாதன் பாலகுமார் | யா/இயற்றாலை அமெரிக்கன் மி.த.க பாடசாலை |
| 08 | 08 | வடவரணி | திரு.சண்முகநாதன் ரதிகுலன் | யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 09 | 09 | இடைக்குறிச்சி | திரு.அரியரட்ணம் வசிகரன் | யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் |
| 10 | 10 | நாவற்காடு | திரு.சிவலிங்கம் பிரதீபன் | நாவற்காடு கிளை மண்டபம் |
| 11 | 11 | நவஜீவனம் | திரு.நாகலிங்கம் குமணதாசன் | யா/மிருசுவில் றோமன் க.த.க பாடசாலை |
| 12 | 12 | வடக்கு மிருசுவில் | திரு.கந்தர் விஸ்ணுகரன் | யா/மிருசுவில் அ.த.க பாடசாலை |
| 13 | 13 | விடத்தற்பளை | திரு.சோமசுந்தரம் தங்கேஸ்வரன் | யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் |
| 14 | 14 | எழுதுமட்டுவாழ் | திரு.சிவசிதம்பரம் சிறிதரன் | யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் |
| 15 | 15 | நாவற்காடு | திரு.கணபதிப்பிள்ளை செந்தூரன் | யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் |
| 16 | 16 | கரம்பைக்குறிச்சி | திரு.கனகரட்ணம் திவாகரன் | கரம்பைக்குறிச்சி பொதுமண்டபம் (திக்கில் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில்) |
| 17 | 17 | கெற்பேலி | திரு.கணேசராசா பரநிருபன் | கெற்பேலி வீரபத்திரர் சனசமூக நிலையம் |
| 18 | 18 | தவசிகுளம் | திரு.விநாசித்தம்பி சிவபாலன் | யா/ போக்கட்டி றோமன் க.த.க பாடசாலை |
| 19 | 19 | உசன் | சற்குணசிங்கம் பிறேமிலன் | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் |

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு(1/4) பங்கினர். அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச்செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கூட்டங்களுக்குச் சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**இல.857, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.கி.சந்திரசேகரன்,**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

### கிளைக்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

- கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
- 18 வயதிற்கு கீழ்ப்பட்டவர்கள்
- உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுள் தீய ஒழுக்க செயலுக்காக குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது 3 மாதங்களுற்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்கு தீர்ப்பளிக்கப்பட்டவர்.
- கடனை தீர்க்க வகையற்றவர் எனப்பிரகடனஞ் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டவர்.
- இச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக்கொடுக்காதவர் அல்லது வேறு எந்த விதத்திலும் தவறு செய்தவர்.
- இச்சங்கத்தில் வியாபாரி என பதிவு செய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடாத்துபவர்.
- சங்கத்தில் ஆதாயங்கருதி ஏதாவது ஒரு பதவியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக்கொடையை பெறுபவர்.
- இச்சங்கத்தில் அல்லது இச்சங்கம் உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்த சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
- ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செயற்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினால் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்ட அதனாற் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாவோ அக்கறை கொண்டிருப்பவர்.
- கூட்டுறவுச்சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்
- இயக்குனர் சபையால் அல்லது கிளை நிர்வாக சபையால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குனர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 6 (2) இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள்.
- [illegible] பணமாகச் செலுத்தி முடிக்காதவரும், அங்கத்தவராக சேர்ந்து ஒரு வருடம் [illegible]

**(சங்கத்தின் துணைவிதிப்பிரிவு 22(1)**
(cr.37105) (2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## வடக்கு...

பாணம் மற்றும் வட பகுதிக்கு அதிக தடவைகள் வருகை தந்து பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுத்தேன். உங்களின் ஆதரவை நான் என்றும் மறக்கமாட்டேன் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கரவெட்டிகொலின்ஸ்விளையாட்டுக்கழக மைதானத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசின் கடமை.

அனைவரையும் சமமாக பார்ப்பது எங்களது சுதந்திரக் கட்சி. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கில் அதாவது தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் அதிகூடிய வாக்குகளுடன் நாடாளுமன்ற உறுப்பினரை எமது கட்சி பெற்றிருக்கின்றது. வரலாற்றில் ஒரு முக்கியமான விடயம். அனைத்து உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்வரும் காலத்தில் எமது கட்சிக்கு மாகாணசபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போதும் அதிகளவில் மக்கள் ஆதரவளிக்க வேண்டும்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வட பகுதியில் பல திட்டங்களை முன்னெடுத்திருந்தேன். காணி விடுவிப்பு மற்றும் வீதிபுனரமைப்புபோன்றபல்வேறுபட்ட அபிவிருத்திகளை எனது ஐந்து வருட ஆட்சியில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் முன்னெடுத்திருந்தேன் - என்றார். (அ-ஒ-26)

## மைத்திரிபால...

பயணம் மேற்கொண்டார். அவருடன் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க ஆகியோரும் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள். இவர்களுடன் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜனும் இணைந்துகொண்டிருந்தார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயம் , ஆரியகுளம் நாகவிகாரை. பெரிய மொஹதீன் ஜும்மா பள்ளிவாசல் ஆகியனவற்றில் இவர்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர். அத்துடன் யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசத்தையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனையும் மைத்திரிபால சிறிசேன சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு மைத்திரி வந்திருந்தார். அதன் பின்னர் நேற்றே யாழ்ப்பாணத்துக்கு அவர் வருகை தந்தார். (அ-ஒ-5)

## அறிக்கை....

வெளியாகியுள்ளன.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்து மூல அவதானம் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக கடந்த திங்கட்கிழமை இலங்கை அரசுக்கு பதிலளிப்பதற்காக அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கைக்கு இலங்கை அரசு தனது பதிலை அனுப்பியுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் 25ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவினர் ஜெனிவாவுக்கு பயணமாகவுள்ளனர். அதற்கு முன்னதாக, இலங்கை அரசின் பதில் அறிக்கையை பகிரங்கப்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஒ-இ)

## பேரம் ...

மக்களின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பேரம் பேசுவதற்கான வாய்ப்பு உருவாகியிருக்கின்றது. இதை இந்தியாவுக்கு கடிதம் எழுதிய 6 தமிழ்க் கட்சிகளும் பயன்படுத்தவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய மாநாடு முல்லைத்தீவில் நேற்று நடைபெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று இலங்கையில் இருக்கக்கூடிய பொருளாதார பலம் சிதறிவிட்டது. சாப்பாட்டுக்கு கூட கெஞ்சவேண்டிய நிலைக்கு போய்விட்டது. இந்தியாவிடம் 3 மாதத்துக்கு ஒருதடவை 500 மில்லியன் டொலர் கடனைப் பெற்று வட்டி கட்ட வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது. 500 மில்லியனை கட்டாவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் இன்னும் இன்னும் அழியும். இவ்வளவுக்கு மோசமான நிலையில் அரசு இருக்கின்றது. அந்த அரசைக் காப்பாற்றும் நிலையில் இந்தியா இருக்கின்றது. இந்தியாவுக்கு விசுவாசமாக செயற்படுகின்ற 6 அமைப்புக்கள் (இந்தியப் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிய தமிழ்க் கட்சிகள்) இருக்கின்றன.

இலங்கைத் தமிழர்களுக்காக இந்தியா ஏதாவது செய்யவேண்டும் என்றால் இப்போதுதான் அதற்கான தருணம் வாய்த்திருக்கின்றது என்பதை இந்தியாவுக்குச் சொல்லி இந்த ஆறு அமைப்புக்களும் செய்யலாம். இதைவிட பேரம்பேசலுக்கான சிறப்பான வாய்ப்பு கிடைக்காது.

ஆனால், இந்த ஆறு அமைப்புக்களும் என்ன செய்கின்றன? சிங்களவர்கள் விரும்புகின்ற 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தச் சொல்லி இப்போது இந்தியாவிடம் கேட்கின்றார்கள். சிங்கள - பௌத்தவெறி பிடித்த சம்பிக்ககூட 13ஆவது திருத்தத்தை ஏற்கலாம் என்று சொல்கிறார். 13ஆவது திருத்தம் தமிழர்களுக்கு எவ்வளவு மோசமானது என்பதை இதைவைத்தே புரிந்து கொள்ளலாம்.

தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றவர்கள், தமிழ்த் தேசியத்துக்கு துரோகம் செய்யக்கூடாது என்ற எண்ணம் இருந்திருந்தால் அந்த 6 கட்சிகளும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரியிருக்கமாட்டார்கள்.

எங்கள் இலக்கை பேரம் பேசல் ஊடாகவே அடைய முடியும் என்று சொன்னபோது அதை கேலிக்குட்படுத்தியவர்கள் தான் இந்த ஆறு கட்சிகளும். இப்போது அவர்கள் முன்பாக பேரம் பேசலுக்கான வாய்ப்பு கிடைத்திருக்கையில் அதைப் பயன்படுத்தாமல் இனத்தை அழிக்க விரும்புகின்ற நிலைப்பாட்டை எடுக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தாலும் தேச அங்கீகாரத்துக்கான கொள்கையை நாங்கள் கைவிடமாட்டோம் என்பதை சர்வதேச சமூகத்துக்கு மனமுவந்து சொல்லுங்கள் என்று 2009 ஆம் ஆண்டு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம், எமது கட்சியின் செயலர் கஜேந்திரன் கூறினார். அவ்வாறு சொல்வதன் ஊடான இனப்படுகொலையை நிறுத்த முடியும் எங்கள் போராட்டத்தையும் காப்பாற்ற முடியும் என்று கூறினோம். ஆனால் அதை சம்பந்தன் செய்யவில்லை.

இன்று இனப்படுகொலைக்கு இராணுவம், சிங்கள தேசத்தின் தலைவர்கள் மாத்திரமல்ல இந்த ஆறு கட்சிக் கும்பல்களின் தலைவர்களும்தான் காரணம்.

தங்கள் பதவிக்காகவும், அவர்களின் எஜமானின் விருப்பத்துக்காகவும் ஒற்றையாட்சிக்குள் எங்கள் அரசியலை முடக்குவதற்கு துணைபோனமையால்தான் இந்த மண்ணில் இனப்படுகொலை அரங்கேறியது - என்றார். (அ-ஒ-இ)

## இறுதிவரை...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழந்தாரென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'பிரபாகரனின் சாவை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர். இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை. அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர். பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு. பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் விரும்பின. அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்திருந்தன. எனினும், பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதி வரைப் போராடியே சாவடைந்தார்' - என்றார். (அ-ஒ-5-22)

## புலனாய்வுத்துறை...

தாகவும் அவை தொடர்பில் புலனாய்வுத் துறையினர் சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவருகின்றது. தீவிர மதக் கோட்பாடுகளைக் கொண்ட குழுக்களும் இவற்றினுள் அடங்கும் என்று குறிப்பிடப்படுகின்றது. (அ-ஒ-இ)

## முள்ளிவாய்க்கால்...

கள் என்ற பெயர் விவரங்களை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கோரியுள்ளனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்ற முன்னாள் அரசியல்கைதியிடமே பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் விவரம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாத விசாரணைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை சம்பந்தமாக இனப்படுகொலை தினத்தை நினைவூட்டும் முகமாக அந்தத்தினத்தில் விளக்கு வைத்து இறந்தவர்களுக்கு சமர்ப்பணம் செய்த காரணத்துக்கு பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வாக்கு மூலம் வழங்கிய போது தனது குடும்ப அங்கத்தவர்களும், நெருங்கிய உறவினர்களும் போரின் மூலம் இறந்து விட்ட காரணத்தினத்துக்காகவே நான் இந்த தினத்துக்கு விளக்கேற்றி அஞ்சலி அவர்களுக்கு சமர்ப்பணம் செய்தேன் என்று வாக்கு மூலம் கொடுத்து அந்த வாக்குமூலத்தின் போது போரில் இறந்த குடும்பத்தினரதும், உறவினர்களினதும் விவரங்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கையளிப்பேன் எனவும் கூறியிருந்தீர்கள். ஆகையால் அந்தப் பெயர்ப்பட்டியலை நாளை வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப்பிரிவிடம் ஒப்படைக்கவும் என்று கோரப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## பச்சைமிளகாய்...

விட்டார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. சந்தேகநபர்கள் இருவரும் தலா 10 மற்றும் 15 கிலோ பச்சை மிளகாய்களை திருடியதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சந்தேகநபர்கள் மதுபோதைக்கு அடிமையானவர்களா என்பதை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிவான் சுன்னாகம் பொலிஸாருக்கு பணித்தார். (அ-ஒ-23)

## போராட்டம்...

முறையிலான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஐந்து ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், அதனை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் பேரணியாகச் சென்று கிளிநொச்சி டிப்போச் சந்தியில் முடிவடைந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், மதத்தலைவர்கள், அரசியல் தரப்பினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

தவத்திரு வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் நிறைவில் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்புவதற்கான மனுவை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க செயலர் ஆனந்த நடராசா லீலாதேவி, தவத்திரு வேலன் சுவாமிகளிடம் கையளித்தார். (அ-ஒ-113)

## தென்மாகாணத்தில்...

தேவையான எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்

# ஷானி வெளியிட்ட தகவலால் பரபரப்பு

**கொழும்பு, பெப். 21**

**ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல் சம்பந்தமாக இதுவரை வெளியாகாத சர்ச்சைக்குரிய பாத்திரம் எனக் கருதப்படும் 'சோனிக் சோனிக்' தொடர்பான விடயங்களை முதல் முறையாக நீதிமன்றத்துக்கு முன்வைத்து, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.**

'சோனிக் சோனிக்' என அழைக்கப்படும் நபர் பயன்படுத்திய சிம் அட்டை தொடர்பில் விசாரணை களை நடத்தும்போது, அது கொழும்பு நகர போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பெண் அதிகாரி ஒருவரின் பெயரில் வாங்கப்பட்டது எனத் தெரியவந்தது என்று ஷானி அபேசேகர தனது மனுவில் கூறியுள்ளார்.

அந்தப் பெண் அதிகாரியிடம் விசாரணை நடத்தப்பட்டபோது, அந்த சிம் அட்டையை அரச புலனாய்வு சேவையில் கடமையாற்றும் உப பொலிஸ் ஆய்வாளருக்கு வழங்கியமை கண்டறிப்பட்டது என்றும் ஷானி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உப பொலிஸ் ஆய்வாளரிடம் விசாரணை நடத்த முயற்சித்தபோது, அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம் எனச் சுட்டிக்காட்டி, விசாரணை நடத்தப் படுவதை அரச புலனாய்வு சேவையின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தடுத்தார் எனவும் ஷானி கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பந்தமாக தான் முறையான விசாரணை களை நடத்தவில்லை எனக் கூறி மீண்டும் கைது செய்யும் முயற்சிகள் நடக்கின்றன என்று ஷானி தனது மனுவில் தெரிவித்துள்ளார். இந்தத் தகவல்களை கொழும்பு டெலிகிராப் இணையத்தளம் வெளியிட்டிருந்தது. அதை மேற்கோள்காட்டி 'லங்காசர' இணையத்தளமும் தகவலை பிரசுரித்திருந்தது. அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் களான ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் அடிக்கடி நாடாளுமன்றத்தில் தமது சிறப்புரிமையை பயன்படுத்தி, இந்த சோனிக் சோனிக் என்ற நபர் பற்றிய தகவல்களை வெளியிட்டு வந்தனர்.

ஹரின் மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் தமது நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி பொய்களைக் கூறுகின்றனர் என்றும், முடிந்தால் அவற்றை வெளியில் சென்று கூற வேண்டும் என்றும் ஆளுங் கட்சியினர் கூறி வந்தனர். தற்போது குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர நீதிமன்றத்துக்கு இந்தத் தகவலை வழங்கியுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

(எ-இ)


## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1982 ரேவதி கி.பா. 7 பட்டதாரி அரசதொழில் புரியும் விவாகரத்து மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. (CS 18462 A) (3/6)

தொடர்புக்கு : 077 545 2892

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பதையுடன் நிலப்பரப்பு இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் A32 பிரதான வீதியில் இருந்து 500m தூரம் பயன்தரும் தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சல் வசதிகள் உள்ளன. (பைப் லையின்) பார்வையிடும் நேரம், காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

ஒரு பரப்பின் விலை 350 000/-

தரகர் தேவையில்லை.



தொடர்புகளுக்கு 077 814 7389 077 117 8578


# மரண அறிவித்தல்



## சின்னையா குலேந்திரன்

### (ராசன் / வெள்ளைத்தம்பி)

ஒதியமலை நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா குலேந்திரன் (ராசன் / வெள்ளைத்தம்பி) அவர்கள் நேற்று முன்தினம் (19.02.2022) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-மனோன்மணி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - சிவனேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தயாநிதி (தயா) வின் அன்புக் கணவரும், கஜீவன் (A/L 2022 கணிதப்பிரிவு மாணவன் - வசாவிளான் மத்திய கல்லூரி), மதுசன், (A/L 2023 வர்த்தகப் பிரிவு மாணவன் - வசாவிளான் மத்திய கல்லூரி) தேனுசா ( தரம் 08 மாணவி - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2022) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிறப்பு 04.07.1970

இறப்பு 19.02.2022

**தகவல்:**

**விஜிந்தன் (பாமினி)) குடும்பத்தினர்**

(CS 43039(3/6))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.